பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 30 ஞாயிற்றுக்கிழமை (14-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:231

# தென்மராட்சியில் நாளை பெரும் மக்கள் பேரணி!

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரி

தென்மராட்சி,ஜூலை14

**புரிந்துணர்வு உடன்பாட்டில் கூறப்பட்டுள்ள விடயங்களைத் துரிதமாக நடைமுறைப்படுத்தக் கோரியும் -**

**ஒப்பந்தத்தை மீறும் வகையில் தென்மராட்சிப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளைக் கண்டித்தும் -**

**நாளை திங்கட்கிழமை சாவகச்சேரிப் பகுதியில் பெரும் மக்கள் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.**

தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்து ஆரம்பமாகும் இப்பேரணி, தென்மராட்சி பிரதேச செயலகத்தை சென்றடையும் அங்கு அரசுக்கு அனுப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதித் தூதராக தமிழர் நியமிப்பு

கொழும்பு,ஜூலை14

அமெரிக்காவின் இலங்கைக்கான பிரிதித் தூதராக சி.எஸ்.பூலோக சிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் நாயகமாகப பணிபுரிந்து வரும இவர் அடுத்த மாதம் முதலாம் திகதி பிரதித் தூதராகப் பதவி ஏற்கவிருக்கின்றார்.

இந்தப் பதவிக்கு தமிழர் ஒருவர் நியமிக்கப்படுவது இதுவே முதற் தடவையாகும். (ம-3)

## அடுத்த ஆண்டு முற்பகுதியில் நாடாளுமன்றத் தேர்தல்?

கொழும்பு,ஜூலை14

அடுத்த ஆண்டு முற்பகுதியில் மீண்டும் ஒரு நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. விரைவிலே நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்குத் தயாராக இருக்குமாறு நாட்டின் இரு பிரதான கட்சிகளான பொ.ஐ.முன்னணியும் ஐ.தே.கட்சியும் தமது அமைப்பாளர்களை மறைமுகமாகப் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் தற்போதைய நாடாளுமன்றம் பதவியேற்று ஒரு வருடகாலம் பூர்த்தியாகின்றது.

நாடாளுமன்றம் பதவியேற்ற ஒருவருட காலத்தின் பின்னர் அதனைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

அதேசமயம் நாடாளுமன்றத்தில் அரசுக்கு தற்போது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லை. இதனால் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணை மற்றும் கட்சித் தாவல் சட்டமூலம் என்பவற்றை நாடாளுமன்றில் நிறைவேற்ற முடியாத நிலையில் அரசு உள்ளது.

இதனால் தற்போதைய சமாதான சூழலைப் பயன்படுத்தி புதிய தேர்தல் ஒன்றை நடத்தினால் தாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுவிட முடியும் என்று ஐ.தே. முன்னணி கருதுவதாகத் தெரிகிறது.

எனவே, நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய தேர்தல்களை நடத்துவதற்கும் அரசு நினைப்பதாகத் கூறப்படுகின்றது.

இதனால் விரைவில் தேர்தல்களை எதிர்கொள்ளத் தயாராக இருக்குமாறு தமது கட்சித்காரர்களை ஐ.தே.கட்சித் தலைமைப்பீடம ஸ்ரீகோத்தா மறைமுகமாகப் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

பொ.ஐ.முன்னணியும் தனது கட்சித் காரர்களைத் தேர்தலுக்குத் தயாராக இருக்குமாறு பணித்துள்ளது.(ம)

## பிரபாவை நாடுகடத்தும் கோரிக்கை இன்னும் வலுவாகவே உள்ளது!

### இந்திய வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,ஜூலை14

ராஜீவ் படுகொலை தொடர்பான விசாரணைக்காக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நாடுகடத்த வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கை தொடர்ந்து வலுவாகவே உள்ளது. இது இலங்கை அரசுக்குத் தெரியும்.

- இப்படிக் கூறினார் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவர். நேற்றுமுன் தினம் மாலை இந்தியப் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது இப்படிக் கூறினார்.

இலங்கையில் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு ஆதரவு வழங்கும் வகையில் பிரபாகரனை நாடுகடத்தும் கோரிக்கையை இந்தியா கைவிடுமா என்று செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

பிரபாகரனை நாடுகடத்தும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## செங்கலடி - பதுளை வீதியை திறப்பது குறித்து புலிகள் - இராணுவம் நேற்று சந்தித்துப் பேச்சு

மட்டக்களப்பு,ஜூலை14

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு நேற்றுச் சென்ற மட்டக்களப்பு மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் அன்ரனீஸ் தலைமையிலான குழு அங்கு புலிகளின் தலைவர்களுடன பேச்சுகளை நடத்திவிட்டுத் திரும்பியுள்ளது.

செங்கலடி - பதுளை வீதியைத் திறப்பது தொடர்பாகவே படையினரும் புலிகளும் சந்தித்துப் பேசியுள்ளனர்.

1990 ஆம் ஆண்டுமுதல் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்த செங்கலடி - பதுளை வீதி நாளை போக்குவரத்துக்கு திறக்கப்படவிருக்கின்றது.

இந்தப் பாதை திறப்புத் தொடர்பாக உயர்மட்ட மாநாடு ஒன்று நேற்றுக்காலை செங்கலடியில் இடம்பெற்றது.

அந்த மாநாட்டில் மட்டக்களப்பு இராணுவத் தளபதி பிரிகேடியர் அன்ரனீஸ், இணைப்பதிகாரி கேணல் குணசேகர ஆகியோரும் -

விடுதலைப் புலிகள் சார்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் விசு, துரை ஆகியோரும் - பங்குபற்றினர்.

இந்த வீதியில் தம்பிட்டிய, செங்கலடி கறுத்தப்பாலம் ஆகிய இடங்களில் படையினரின் சோதனை நிலையங்களையும் -

தம்பானம், பெரிய புல்லுமலை ஆகிய இடங்களில் விடுதலைப் புலிகளின் சோதனை நிலையங்களையும் - அமைப்பதென அங்கு முடிவு செய்யப்பட்டது.

இந்தப் பாதையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் 20 கிலோ மீற்றர் ஆகும்.

அந்தப் பகுதிக்கே படை அதிகா

(16 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பத் தகராறு காரணமாக தந்தையை வெட்டிய மகன்!

### மல்லாகத்தில் கொடூரம்

யாழ்ப்பாணம்,ஜூலை14

தகப்பன் - மகனுக்கிடையில் ஏற்பட்ட தகராறில், மகன் தந்தையை வெட்டிக் கொலைசெய்ததாகத் தெரிவித்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

மல்லாகம் - கோட்டைக்காடு பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 11.00 மணிக்கு இடம்பெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவத்தில் கந்தையா தவராசலிங்கம் (வயது55) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலத்தின் பிடரிப் பகுதியிலும், முதுகிலும் வெட்டுக் காயங்கள் காணப்பட்டன. உயிரிழந்தவர் தினமும் மதுபோதையில் வந்து மனைவி பிள்ளைகளுடன் சண்டை பிடிப்பவர் என்றும் -

வழமை போலவே சம்பவ தினம் இரவும் இடம்பெற்ற சண்டையிலேயே மகன் தந்தையை வெட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சடலம் மரணவிசாரணைக்காக வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-15-139)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் நாளைய உதயனில் இடம்பெறும்.

(வினாத்தாள்களின் மேலதிக பிரதிகளைப் பெற விரும்புபவர்கள் வினாத்தாள் ஒன்று ஒரு ரூபா வீதம் உதயன் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.)

## நிமால் கொலை வழக்கில் மேலும் 2 ஈ.பி.டி.பியினர் கைது!

கொழும்பு,ஜூலை14

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பாக ஈ.பி.டி.பி..அமைப்பைச் சேர்ந்த மேலும் இருவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

தீவுப்பகுதியில் வைத்து வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட அவர்கள் மேல்விசாரணைக்காக கொழும்புக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர் என்றும் -

அவர்கள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்றும் - குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்தப் படுகொலை தொடர்பாக ஈ.பி.டி.பி.அமைப்பைச் சேர்ந்த மொத்தம் 6 பேர் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-3)

## வைகோ கைதைக் கண்டித்து எதிர்ப்பு நடவடிக்கைகள்!

### கூட்டமைப்பு ஏற்பாட்டில் நடக்கும்

கொழும்பு,ஜூலை14

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வைகோ கைது செய்யப்பட்டதைக் கண்டிக்கும் வகையில் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைபு மேற்கொள்ளவிருக்கின்றது.

83 ஆம் ஆண்டுமுதல் ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுத்துவரும வைகோ கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்து ஈழத்தமிழ் மக்களின் உணர்வுபூர்வமான எதிர்ப்பை வெளிப்படுத்துவதென கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

அவர் விடுதலை செய்யப்படும் வரை இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதென்றும் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

முதல் நடவடிக்கையாக நாளை இந்தியத் தூதரைச் சந்தித்து

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் கடத்தப்பட்டுள்ளனராம்

### அந்த அமைப்பு குற்றஞ்சாட்டுகிறது

கொழும்பு,ஜூலை14

கண்டி வீதியில் ஓமந்தைக்கும் முகமாலைக்கும் இடையில் தமது கட்சி உறுப்பினர் இருவர் உட்பட நால்வர் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுள்ளனர் என்று ஈ.பி.டி.பி குற்றஞ் சாட்டியுள்ளது.

தமது கட்சி உறுப்பினர்களான தாமன், பாலமுரளி, நவரத்தினம், சங்கர் ஆகியோரும் -

யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவனான நிமால் சங்கர் மற்றும் கந்தசாமி சசிக்குமார் ஆகியோரும் - கடத்தப்பட்டுள்ளனர் என்று ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஓமந்தைக்கும் முகமாலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் பஸ்களில் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதியும் பயணம் செய்ய வேண்டும் என்று தமது கட்சி கோரியுள்ளது என்றும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# விளையாட்டு




பரிசளிப்பு நிகழ்வின்போது எடுக்கப்பட்டபடம். நிற்பவர்கள்: எல்.ஜி. அபான்ஸ் சந்தைப்படுத்தல் முகாமையாளர் கு.குலேந்திரன், சென்.ஜோன்ஸ் அதிபர் எஸ்.தனபாலன், மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை.

### வடக்கின் பெரும் போர்

## மத்திய கல்லூரி அணி நேற்று ஆறு விக்கெட்டுகளால் வெற்றி!

யாழ்ப்பாணம்,ஜூலை14

வடக்கின் பெரும் போரில் சென். ஜோன்ஸ் அணியை 6விக்கெட்டுக் களால் தோற்கடித்து யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றிவாகை சூடியது.

சென்.ஜோன்ஸ் - மத்திய கல்லூரி அணிகள் இடையேயான இப் போட்டியில் மத்திய கல்லூரி அணி பெறும் 22ஆவது வெற்றி இதுவாகும்.

நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் தனது இரண்டாவது இனிங்ஸை ஆட ஆரம்பித்திருந்த சென் ஜோன்ஸ் அணி நேற்றுக்காலை தனது ஆட்டத்தைத் தொடர்ந்தது. 2 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட் என்ற நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சற்று நிதானமாக ஆடினர். எனினும் ஒரு கட்டத்தில் 42 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களை இழந்திருந்தனர்.

தொடர்ந்து சென்.ஜோன்ஸ் அணியின் விக்கெட்டுக்கள் தொடர்ச்சியாகச் சரிய ஆரம்பித்தன. அந்த அணி வீரர் சி.அகிலன் நின்று நிதானமாக ஆடி 31 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்வதற்கு பெரிதும் உதவினார். இந்தப் போட்டியில் சென்.ஜோன்ஸ் அணி வீரர் ஒருவர் அடித்த ஆகக் கூடுதலான ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். முதல் இனிங்ஸில் பி.லவேந்திரா 27 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இறுதியில் சென்.ஜோன்ஸ் அணி தனது இரண்டாவது இனிங்ஸில் 123 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

மத்திய கல்லூரி பந்து வீச்சாளர்கள் எஸ்.விமலகாந் 28ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும், எஸ். சிவகுமார் 23 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும், பிரசாத் 31ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றுக்களையும வீழ்த்தினர்.

சென்.ஜோன்ஸ் அணி தனது இரு இனிங்ஸ்களிலும் பெற்ற ஓட்ட எண்ணிக்கை மத்திய கல்லூரியின் முதல் இனிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையான 176 இலும் பார்க்க 49 ஓட்டங்களால் அதிகமாக இருந்தது.

50 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மத்திய கல்லூரி அணி சுமார் 1.15மணி நேரம் துடுப்பெடுத்தாடி 4விக்கெற்றுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

மத்திய கல்லூரியின் இரண்டாவது இனிங்ஸில் க.கார்த்திக், எஸ்.பிரசாத் ஆகியோர் தலா 11 ஓட்டங்களையும் வி.ஜீவகுமார் ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென்.ஜோன்ஸ் பந்து வீச்சாளர்கள் பி.லவேந்திரா, எஸ்.அகிலன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

வடக்கின் பெரும் போரின் 96 ஆவது போட்டியில் 6விக்கெட்டுக்களால் மத்திய கல்லூரி அணி, சென்.ஜோன்ஸ் அணியை வென்றது.

**ஸ்கோர் விவரம்:**

**முதல்இனிங்ஸ்:**

| | |
|---|---|
| சென்.ஜோன்ஸ் | 102/10 |
| மத்திய கல்லூரி | 176/9 |

**இரண்டாவது இனிங்ஸ்:**

| | |
|---|---|
| சென்.ஜோன்ஸ் | 123/10 |
| மத்திய கல்லூரி | 53/4 |

இந்த ஆட்டத்தின் சிறந்த ஆட்டக் காரராக - ஆட்ட நாயகனாக - மத்திய கல்லூரி வீரர் எஸ்.விமலகாந்த் தெரிவு செய்யப்பட்டார். சகலதுறை ஆட்டக்காரராக சென். ஜோன்ஸ் அணித் தலைவர் பி. லவேந்திராவும், சிறந்த துடுப்பாட்ட வீரராக மத்திய கல்லூரி வீரர் கே. கார்த்திக்கும், சிறந்த களத்தடுப்பாளராக சென்.ஜோன்ஸ் வீரர் சி. அகிலனும், சிறந்த பந்து வீச்சாளராக மத்திய கல்லூரி எஸ்.சிவகுமாரும், அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரராக மத்திய கல்லூரி வீரர் கே. கார்த்திக்கும் தெரிவாகினர்.

இவர்களுக்கான மிகப் பெறுமதி வாய்ந்த பரிசில்களை அபான்ஸ் நிறுவனம் வழங்கியது. (ம-ரீ-56)



போட்டியின் ஆட்ட நாயகனாக தெரிவுசெய்யப்பட்ட எஸ்.விமலகாந்திற்கு அபான்ஸ் நிறுவனத்தின் பரிசு வழங்கப்படுகிறது.

### கடந்தகால யுத்தத்தினால் அழிவடைந்த

# கூ. சங்கங்களை மீள நிறுவ உரிய நடவடிக்கை எடுப்பேன்

### கூட்டுறவு அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை14

யாழ்.மாவட்டத்தில் யுத்தத்தினால் அழிந்துபோன கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளை மீளவும் கட்டியெழுப்ப அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய கூட்டுறவுத்துறை அமைச்சர் ஏ.ஆர்.எம்.காதர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் தனிப்பெருமை பெற்றவையாக விளங்கிவந்தன. அதற்காக இப்பொழுது அவ்வாறு இல்லை என்பது அர்த்தமல்ல. மேற்படி சங்கங்கள் தற்பொழுது நட்டத்துடன் இயங்கி வருவதனால் அப்படிக் குறிப்பிட்டேன்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் நாங்கள் இங்கு வருகைதந்துள்ளோம். அதனால் மக்களின் முகங்களில் மகிழ்ச்சியைக் காணக் கூடியதாக உள்ளது. நான் எங்கு சென்றாலும் வெறுங்கையுடன் செல்வதில்லை. அதன்படி இங்கு வரும்போதும் வெறுங்கையுடன் வரவில்லை. பதினைந்து கணனிகளுடனேயே வந்தேன். திரும்பிச் செல்லும்போதும் வெறுங்கையுடன் செல்லமாட்டேன் பழவகைகளையும், பனம் பண்டங்களையும் எடுத்துச் செல்லவுள்ளேன் - என்றார்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் தனதுரையில் தெரிவித்ததாவது:-

கடந்த 20 வருட காலமாக யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் குடாநாட்டு மக்களுக்குச் சிறந்த சேவையாற்றி வந்துள்ளன. மக்களுக்கான பணிகளைச் செய்வதில் அவை என்றுமே பின்நின்றதில்லை. ஆனால், யாழ்ப்பாணத்தில் உள்ள கூட்டுறவாளர்களுக்கு நிறையப் பிரச்சினைகள் உண்டு. அவை யாவும் அரசினாலும் கூட்டுறவுத் துறை அமைச்சரினாலும் தீர்க்கப்பட வேண்டும் - என்றார்.

யாழ்மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி, யாழ். ப.நோ.கூ.ச. தலைவர் சி.வி.கே.சிவஞானம் உட்படப் பலரும் இக் கூட்டத்தில் உரையாற்றினார்கள். (எ-10-8-17)

### தென்மராட்சி அழிவுகளை

## கூட்டுறவு அமைச்சர் இன்று பார்வையிடுவார்

யாழ்ப்பாணம்,ஜூலை14

இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் ஏ.ஆர்.எம். காதர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளார்.

நேற்றுப் பகல் வருகைதந்த அமைச்சர் நண்பகல் 12.30மணியளவில் யாழ்.மத்திய கல்லூரி மைதானதத்தில் நடைபெற்ற சென்.ஜோன்ஸ் - மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் ஆட்டத்தைப் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் அமைச்சர் கலந்துகொண்டார். இக் கூட்டத்தில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், கூட்டுறவாளர்கள் உட்பட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினால் 22 லட்சம் ரூபா செலவில் திருநெல்வேலியில் அமைக்கப்பட்ட பால் பதனிடும் தொழிற்சாலையை இன்று காலை அமைச்சர் ஏ.ஆர்.எம்.காதர் திறந்து வைப்பார்.

அதன பின்னர் தென்மராட்சிப் பிரதேசத்துக்கு விஜயம் செய்யும் அமைச்சர் அங்கு போரினால் பெரும் சேதத்துக்குள்ளான சாவகச்சேரி மற்றும் கைதடி ப.நோ.கூ.சங்கங்களைப் பார்வையிடுவார். நண்பகல் யாழ்.ப.நோ.கூ.சங்கத்துக்கு விஜயம் செய்யும் அமைச்சர் அங்கு விருந்துபசாரத்திலும் கலந்துகொள்வார். பின்னர் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி சபைக்குச் செல்லும் அமைச்சர் இன்று மாலையே கொழும்பு திரும்புவார். (எ-10-8-17)

## கொழும்பில் இருந்து வந்தவர் விபத்தில் சிக்கிப் படுகாயம்!

### யாழ்.நகரில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை,14

யாழ்நகரப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வெவ்வேறு மோட்டார் சைக்கில் விபத்தில் மூவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் இவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளார்.

யாழ்.பஸ்நிலையப் பகுதியில், ஆஸ்பத்திரி வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் யாழ் மவுண்கார்மல் வீதியைச் சேர்ந்த எஸ். கே. தியோப்பிலஸ்(வயது70) என்பவர் படுகாயம் அடைந்தார்.

கொழும்பில் இருந்து வந்த இவர் பஸ்ஸால் இறங்கி ஆஸ்பத்திரி வீதியைக் கடக்க முயன்றபோது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது. இவரே சுயநினைவிழந்து ஆபத்தான நிலையில் உள்ளார் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவர் யாழ். ஆஸ்பத்திரிப் பொலீசாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை - காங்கேசன்துறை வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் தாவடி நந்தாவில் பகுதியைச் சேர்ந்த எஸ். சாந்தன் (வயது19) என்பவர் படுகாயம் அடைந்தார். இவர் சென்ற மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி, அக்கல்லூரியின் 7ஆம் ஆண்டு மாணவன் ஒருவர் காயமடைந்தார்.

மேற்படி கல்லூரிக்கும், யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியின் போது மைதானத்தின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தவர் ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டே விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் கல்லூரி விடுதியில் தங்கியிருந்து கல்விகற்கும், பண்டத்தரிப்பைச் சேர்ந்த இராசரட்ணம் பிரசாந் (வயது12) என்ற மாணவனே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-15)

### பாராட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை14

ஆவரங்கால் சிவன் ஆலயத்தின் மஹோற்சவ காலங்களில் தொடர் தெய்வீகப் பேருரை நிகழ்த்திய சிவத்தமிழ் சொல்லழகர் ச. லவீசனைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை மாலை ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-72)

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை14

யாழ்மத்திய கல்லூரி பழைய மாணவர் அணிக்கும், சென்ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணிக்கும் இடையிலான வருடாந்த கிரிக்கெட் போட்டி இன்று யாழ்.மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

50 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக்கொண்ட இக்கிரிக்கெட் போட்டி இன்றுகாலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

(எ-51)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜூலை14

இலங்கை வங்கி மற்றும் வர்த்தகவங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி- அரியாலை காந்தி வி.க. எதிர் அரியாலை திருமகள் வி.க. (பெண்கள்)

★ மாலை 4 மணி - கோண்டாவில் மறுமலர்ச்சி வி. க. எதிர் இணுவில் கலாயோதி வி.க.

இந்த இறுதியாட்டத்தில் வெற்றியீட்டும் களகங்களுக்கான வெற்றிக் கிண்ணங்களை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா வழங்குவார். (எ-ரீ)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜூலை14

நெடுந்தீவு ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் பழனி, பாபு ஆகியோர் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நெடுந்தீவு மேற்கு ஐக்கிய தீப மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் உதயசூரியன் வி. கழகமும், ஐக்கியதீபம் வி. கழக அணியும் பங்குபற்றுகின்றன.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளன. (எ-ரீ)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜூலை14

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4 மணி - பருத்தித்துறை ஐக்கிய வி. க. அணி எதிர் சென் அன்ரனீஸ் வி.க. 'பி' அணி

★ பிற்பகல் 5 மணி - சென் அன்ரனீஸ் வி.க. 'ஏ' அணி எதிர் வல்வை வி. க. அணி.

(எ-ரீ)

### கோட்டமட்ட தமிழ்த்தின போட்டிகள்

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் இன்று யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

நாடகம், தமிழறிவு வினா-விடைப் போட்டிகளே இவ்வாறு நடைபெறவுள்ளன. (எ-51)

# இலங்கைத் தமிழருக்காக சிறை செல்வது மகிழ்ச்சியே!

## வைகோ பெருமிதம்



சென்னை,ஜூலை14

ஈழத்தமிழருக்காக சிறை சென்றமையை இட்டு நான் மகிழ்வடைகின்றேன். இப்படிக் கூறியுள்ளார் வைகோ. வேலூர் சிறையில் இருந்துகொண்டு தனது சட்டத்தரணிமூலம் வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

"எனது கைதுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதானால் கட்சித் தொண்டர்களும், ஆதரவாளர்களும் அமைதியான வழிமுறையைப் பின்பற்றியே எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சாதாரண குடிமகனை அடைக்கும் சிறைப் பிரிவில் என்னையும் அடைக்கும்படி கோரியபோதிலும் அதைமறுத்து நீதிபதி விஷேட அறையிலேயே என்னை தடுத்துவைக்குமாறு உத்தரவிட்டுள்ளார் என்றுள்ளது.

வைகோவின் சட்டத்தரணி கருத்துத் தெரிவிக்கையில் வைகோவை கைது செய்யும் உரிமை தமிழக அரசிற்கு இல்லை. அவர் மீது பிடியாணை பிறப்பிக்கும் உரிமை சிறப்பு நீதிமன்றத்துக்கு மட்டுமே உண்டு. ஆகவே வைகோ கைது செய்யப்பட்டமை சட்டவிரோதமானது" எனத் தெரிவித்துள்ளார். இதற்கிடையில் -

வைகோ கைது செய்யப்பட்டதை எதிர்த்து தமிழகமெங்கும் ம.தி.மு.கவினர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 3 ஆயிரத்துக்கும் அதிகமான ம.தி.மு.கவினர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# செப்ரெம்பர் 11 தாக்குதல்; கைதானவர்களில் 1025 பேர் விடுவிப்பு!

வாஷிங்ரன்,ஜூலை14

கடந்த செப்டெம்பர் 11இல் அமெரிக்கா மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதன் பின்னர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்களில் ஆயிரத்து 25 பேர் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்டவர்களில் பாகிஸ்தானைச் சேர்ந்த 131பேர் அந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

தீவிரவாதிகளின் தாக்குதலைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் ஆயிரத்து 100 பேர் அமெரிக்க அதிகாரிகளால் அநேகர் இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

இவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று மனித உரிமைகள் அமைப்புகள் அமெரிக்க அரசுக்கு கடும் அழுத்தங்களை வழங்கிவந்தன.

இதனை அடுத்து 74பேர் தவிர்நத ஏனையோரை அமெரிக்க அரசு விடுவித்தது. அவர்களில் பெரும்பாலானவர்கள் தத்தமது தாய்நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள 74 பேரில் 38 பேர் விரைவில் விடுதலைசெய்யப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்தவர்களின் பெயர் விவரங்களை வெளியிடாமல் இருந்ததற்காகவும், அவர்கள் நடத்தப்பட்ட விதம் குறித்து தகவல் தெரிவிக்காமல் இருந்ததற்காகவும் அரசின் மீது வழக்குத் தொடரப்போவதாக அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது. (ம)




அமெரிக்காவின் கறுப்பினச் சிறுவன் ஒருவனை கைவிலங்கு பூட்டி கண்மூடித்தனமாக தாக்கியதாகக் கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய வெள்ளையின பொலீஸ் அதிகாரியைக் கைது செய்து அவர் மீது வழக்குத் தொடர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து லொஸ் ஏஞ்செல்ஸ் நகரின் நேற்றுமுன்தினம் கறுப்பின மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

# ம.தி.மு.கழகத்தை தடை செய்வேன்!

## ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை,ஜூலை14

புலிகளுக்கு வெளிப்படையான ஆதரவை வழங்கிவரும் ம.தி.மு. கழகத்தை பயங்கரவாதத் தடைச் சட்டமான பொடாவின் கீழ் தடை செய்யப்போவதாக தமிழக முதல்வர் தெரிவித்தார்.

தமிழக அரிசின் தலைமைச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பேசிவரும் மற்ற கட்சிகள் மற்றும் இயக்கங்கள் மீதும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் நடவடிககை எடுக்கப்படும் என்று அவர் எச்சரித்தார்.

ம.தி.மு.க.பொதுச் செயலர் வைகோவை கைது செய்ததில் எந்த அரசியல் உள்நோக்கமும் கிடையாது என்று கூறிய முதலமைச்சர், இந்த மண்ணில் சட்டத்தை மீறியதற்காக அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

சென்னையில் சமீபத்தில் கூடிய ம.தி.மு.க.வின் செயற்குழு கூட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகவும், ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகவும் செயறபடுவது தங்கள் கட்சியின் நோக்கம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக ஜெயலலிதா கூறினார்.

இப்படிப்பட்ட ஒரு கட்சியின் உறுப்பினர்கள் மத்திய அமைச்சரவையில்



நீடிக்க அனுமதிப்பது, தமிழ் ஈழத்தை ஆதரிப்பதற்கு ஈடாகும் என்று அவர் மேலும் கூறினார்.

தமிழ்த் தேசிய விடுதலை இராணுவம், தமிழ் தேசிய மீட்புப்படை போன்ற தீவிரவாத இயக்கங்களை தடை செய்ததைப்போல ம.தி.மு.கவையும் குற்றவியல் திருத்தச் சட்டத்தின் கீழ் தடை செய்வீர்களா என்று செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு-

கிரிக்கெட் வர்ணனையைப்போல அடிக்கு அடி என்ன செய்யப்போகிறோம் என்பதையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க முடியாது என்று காட்டமாக பதிலளித்த ஜெயலலிதா, குற்றவியல் திருத்தச் சட்டத்தின் கீழ், மாநில அளவில் ஓர் அமைப்பை தடைசெய்ய அரசுக்கு அதிகாரம் உள்ளது. ஆனால் தேசிய அளவில் தடைசெய்ய வேண்டுமெனில் மத்திய அரசின் ஒப்புதல் தேவை என்று கூறினார்.

வைகோ கைது விவகாரத்தில் சட்டப்படி என்ன செய்ய வேண்டுமோ அதனை மாநில அரசு செய்து வருகிறது. இதற்கு மத்திய அரசின் ஒத்துழைப்பு ஒன்றும் தேவையில்லை என்று கூறிய ஜெயலலிதா, மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கை காப்பதும், தேசத்தின் ஒற்றுமையையும் இறையாண்மையையும் காப்பதும்தான் தனது முதல் கவலை என்று கூறினார்.

வைகோ திருமங்கலம் கூட்டத்தில் பேசியதன் ஒளிப்பதிவு குறித்தும் தமிழக அரசு திட்டமிட்ட நடவடிக்கை குறித்தும் துணைப் பிரதமரும், உள்துறை அமைச்சருமான அத்வானிக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், அதற்கு பதில் அனுப்பிய அத்வானி, வைகோ கைதிற்கு எதிராக எதையும் கூறவில்லை என்றும் ஜெயலலிதா கூறினார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நடவடிக்கைகள் அனைத்தையும் இரும்புக்கரம்கொண்டு ஒடுக்குவோம் என்றும் ஜெயலலிதா சூளுரைத்தார். விடுதலைப் புலிகளுக்கும், பிரபாகரனுக்கும் ஆதரவளிக்க வைகோ அனுமதிக்கப்பட்டால் அதனால் மக்கள் தவறான திசையில் வழிநடத்தப்படும் வாய்ப்பு ஏற்படும் என்றும் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், ஒரு பயங்கரவாத இயக்கமே தவிர வேறொன்றும் கிடையாது. இதுதான் உலகத்திலேயே மிக பயங்கரமான இயக்கமாகும் என்று ஜெயலலிதா வர்ணித்தார்.

வைகோவை கைதுசெய்தது தேவையற்ற நடவடிக்கை என்று முன்னாள் சட்ட அமைச்சரும், பாரதிய ஜனதா கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளருமான அருண் ஜேட்லி கூறியிருப்பது தனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது என்று கூறிய ஜெயலலிதா, அரசியல் அவசியம் காரணமாக அப்படி ஒரு அறிக்கையை வெளியிட வேண்டிய கட்டாயம் அருண் ஜேட்லிக்கு ஏற்பட்டிருக்கும் என்று கூறினார். (ம)

### உலக அரங்கில்

# 8 கோடி ரூபா பெறுமதியான யானைத் தந்தங்கள் மீட்பு

## சிங்கப்பூரில் சம்பவம்

சிங்கப்பூர்சிற்றி,ஜூலை14

சிங்கப்பூர் வழியாக ஜப்பானுக்குக் கடத்தப்பட இருந்த 6தொன் யானைத் தந்தங்கள் சிங்கப்பூர் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளன.

கென்டெய்னர் ஒன்றில் இந்த தந்தங்கள் கொண்டு செல்லப்பட்டபோது அவை கைப்பற்றப்பட்டன.

532 முழுமையான யானைத் தந்தங்களும் 40ஆயிரத்து 800 தந்தத் துண்டுகளும் கென்டெய்னரில் இருந்துள்ளன. அவற்றின் பெறுமதி அமார் 8 கோடி ரூபாய்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 4 பேரை சிங்கப்பூர் பொலீஸார் கைது செய்துள்ளனர். அந்த நாட்டில் அனுமதியின்றி விலங்குகளின் பாகங்களை இறக்குமதி செய்வதோ ஏற்றுமதி செய்வதோ கடும் குற்றம். இதற்காக அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா அபராதமும் ஓர் ஆண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்படலாம். (ம)

# பின்லேடனின் நிதி ஆலோசகர் பாகிஸ்தானில் கைதானார்?

இஸ்லாமாபாத்,ஜூலை14

சர்வதேச தீவிரவாதி என அமெரிக்காவால் குற்றஞ்சாட்டப்படும் ஒஸாமா பின்லேடனின் நிதி ஆலோசகர் எனக் கூறப்படும் ஷேக் அகமது கைதுசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவருடன் மேலும் இரு தீவிரவாதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் கராச்சி நகரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் திடீர் தேடுதல் நடத்திய பாகிஸ்தான் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் இவர்களைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்லேடனின் நிதி ஆலோசகர் குறித்து கைது செய்யப்பட்ட அல் கெய்டா தீவிரவாதிகள் தெரிவித்ததன் அடிப்படையிலேயே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதுவரை 30 அல்கெய்டா தீவிரவாதிகள் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# 8 ஆசிய நாடுகளுக்கு கொலின்பவல் விஜயம்

## அமெரிக்கப் பாதுகாப்பை வலியுறுத்த



வாஷிங்ரன்,ஜூலை14

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின்பவல் 8 ஆசிய நாடுகளுக்கு இந்த மாத இறுதியில் விஜயம் மேற்கொள்ள உள்ளார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி தனது ஆசிய விஜயத்தைத் தொடங்கும் கொலின் பவல் இந்தியா, பாகிஸ்தான், தாய்லாந்து, மலேஷியா, சிங்கப்பூர், புருணை, இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு செல்வார்.

ஆசியப் பிராந்தியத்தில் நிலவும் இஸ்லாமியத் தீவிரவாதம் குறித்து ஆசியத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவார் என்று கூறப்படுகிறது.

பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்க நிலைகளை குறிவைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களும் -

சிங்கப்பூர் மற்றும் மலேஷியாவில் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் தொடர்புகள் கண்டுபிடிக்கப்பட்டமையும் -

ஆசியப் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க நிலைகளின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாகக் கருதப்படுகிறது.

இந்த நிலையில் பவலின் ஆசிய விஜயம் இப்பிராந்தியத்தில் அமெரிக்க நலனைக் காக்கும் நடவடிக்கை என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ)

# விபசார விடுதி நடத்தியதாக பிரபல நடிகை மாதுரி கைது!



சென்னை,ஜூலை14

சென்னையில் விபசார விடுதி நடத்தியதாக பிரபல தமிழ் நடிகை மாதுரி கைது செய்யப்பட்டார்.

நடிகை மாதுரி 'சம்சாரம் அது மின்சாரம்' உட்பட 50 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். சில படங்களில் கதாநாயகியாகவும் நடித்திருக்கின்றார். 'மனிதன் படத்தில் ரஜனிகாந்தின் தங்கையாக நடித்தார்.

மாதுரியின் வீடு சென்னை தியாகராய நகர் தெற்கு போக் வீதியில் உள்ளது. இந்த வீட்டில் விபசாரம் நடப்பதாக கிடைத்த தகவலகளையடுத்து பொலீஸார் சோதனையிட்டனர்.

அப்போது அங்கு விபசாரத் தொழிலில் ஈடுபட்ட இரு யுவதிகளும் அவர்களுடன் தங்கியிருந்த தெலுங்கு திரைப்பட வில்லன் நடிகர் குமார், பட அதிபர் பிரசாத்ரெட்டி ஆகியோரும் பிடிப்பட்டனர். இதனைத் தொடர்ந்தே விபசார விடுதி நடத்திய குற்றச்சாட்டின் பேரில் நடிகை மாதுரி கைது செய்யப்பட்டார். (ஒ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கல்வியங்காட்டில் 3ஆம் கட்டை வயிரவர் கோயில் முன்பாக 10 பரப்புத் தென்னங்காணியும் வயலும், 3ஆம் கட்டை ஒழுங்கையில் (பண்டாரிபுலம்) 5 பரப்புக் காணியும், விளையாட்டரங்க வீதியில் 6 பரப்புக் கலட்டிக் காணியும் செம்மணி கோரன்குளி வயலும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி மா.முத்துக்குமார், 38, இராச வீதி, நல்லூர். (5874)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (5849)

பருத்தித்துறை வீதியில் இருந்து 200 யார் தூரத்தில் 11/2 பரப்புக் காணி கல்வியங்காட்டில் விற்பனைக்கு உண்டு. 3 அறைகள், ஒரு Hall இற்குமான அத்திவாரம், கிணறு, மலசலகூடம், மின்சாரம், வாகனப் போக்குவரத்துப் பாதை வசதி என்பன உண்டு. உரிமையாளர் வெளிநாடு செல்லவுள்ளதால் உடன் விற்பனை. தொடர்பு: க.அம்பிகைபாகன், 38, சிவன்கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு. (5800)

45நாள் நிரம்பிய மண்நிற பொமனேரியன் ஆண் நாய்க்குட்டியும், கறுப்பு பொமனேரியன் ஆண், பெண நாய்க்குட்டியும், 11மாதம் நிரம்பிய பெண் அல்சேசன் நாயும், 3மாதம் நிரம்பிய அல்சேசன் (ஜேர்மன் செப்பேட்) குட்டிகளும் விற்பனைக்குண்டு. க.நடராசா, செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் (கோண்டாவில் சந்தி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில்). (5912)

மல்லாகம் பங்களா வீதியில் சகல வசதிகளும் உள்ள 51/2 பரப்புக் காணியுடன் வீடும், அதேவீதியில் வெற்றுக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச.சூரியகுமார், பங்களாவீதி, மல்லாகம். (5880)

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5767)

நல்ல நிலையில் வளர்க்கப்பட்ட பிறிமா புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: மல்லிகாபதி, மானிப்பாய். (C-22916)

CG 125 (China Model Self Start) புதியது மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.நித்தியானந்தன், இல.28, அம்மன் வீதி, திருநெல்வேலி. (5959)

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் சந்தி முதலாம் ஒழுங்கையில் (சதா பேக்கரி லேன்), பலாலி வீதியில் இருந்து 50 யார் தூரத்திற்குள் கிணற்றுடன் 51/8 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சோதிநாதன் (T.P.No.: 593966), கொழும்பு. (5898)

## தவறிவிட்டது

மறவன்புலோ மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த அண்ணலிங்கம் (சின்னவன்) ஜெயகலா என்பவரது விசேட அ.அட்டை (இல.091016857), தேசிய அ.அட்டை (இல.688541930V) மற்றும் முக்கியமான ஆவணங்கள் என்பன மாசியப்பிட்டிக்கும் மருதனார்மடத்துக்கும் இடையில் சிறிய பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சி. அருமைத்துரை (சிறி), பனைடத்தரிப்புமனை, தென்னை அ.கூ.சங்கம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (5926)

315460085V இலக்கமுடைய இராமசாமி நாகேஸ்வரி ஆகிய எனது தே.அ.அட்டை கடந்த வாரம் திருநெல்வேலிக்கும் அரியாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் பணிமனைக்கு அருகில் இருக்கும் ஆரணி தொலைத்தொடர்பு நிலையத்தில் ஒப்படைத்துதவவும். (5928)

அம்பலனைச் சேர்ந்த குமாரசாமி கார்த்திகேயன் என்பவரின் தே.அ. அட்டை, 2002 வரி அட்டையுடன் கண்ணாடி (கேசுடன்), 2002 டயறி, இரு உடுப்புகள், சில பத்திரங்கள் என்பன அடங்கிய பை ஒன்று 08.07.2002இல் குடத்தனை - வரணியூடான மணற்காட்டு வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் V.தளையசிங்கம், இந்திராணி வெதுப்பகம், கொடிகாமத்தில் ஒப்படைத்துதவவும். (C-22931)

## மணமகள் தேவை

சுவிஸில் நிரந்தர பிரஜாவுரிமையுடைய 1968ஆம் ஆண்டு பிறந்த, ஆயிலியம் முதலாம் பாதம் கிரக பாவம் 20, 12இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு அழகிய, படித்த மணமகள் தேவை. தொடர்பு: ச.அன்ரன் செல்வராஜா, உச்சில் அம்மன் கோயிலடி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி.(5954)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1972, விசாக நட்சத்திரம், செவ்வாய்க்குற்றமற்ற லண்டனில் வேலை செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. புகைப்படம், குறிப்பு முதலியவற்றுடன் விண்ணப்பிக்கவும். ப.கிருஷ்ணமூர்த்தி, தேவி அச்சகம், 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5955)

## மணமகன் தேவை

1968, மிருகசீரிடம், 8இல் செவ்வாய், கிரகபாவம் 30, சுவிஸிலுள்ள மணப்பெண்ணுக்கு Sponser செய்யக்கூடிய மணமகன் தேவை. மணமக்கள் தேவைக்கு நாடுங்கள்: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (5736)

சைவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1969ஆம் ஆண்டு, கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்த, பட்டதாரி ஆசிரியைக்கு பெற்றோர் தகுந்த மணமகனை எதிர்பார்க்கிறார்கள். அரச அல்லது தனியார் நிறுவனங்களில் கடமை புரிவோர் விரும்பத்தக்கது. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் உடன் தொடர்புகொள்ளவும்: விளம்பர இல. 1568, c/o உதயன். (5960)

## திருமண சேவை

செவ்வாய்க் குற்றமற்ற பட்டதாரி, 1970இல் பிறந்த, ரோகிணி நட்சத்திர மணமகளுக்கு பட்டதாரி மணமகன் தேவை. 1969, 1972இல் பிறந்த செவ்வாய் குற்றமற்ற மணமகன்களுக்கு பட்டதாரி அல்லது பயிற்றப்பட்ட, அழகான ஆசிரிய மணமகள்கள் தேவை. தொடர்பு: இ.பாஸ்கரன், திருக்குமரன், மங்கள ஏஜென்சி, சக்தி மெடிக்கல் கட்டடம், K.K.S. வீதி, கொக்குவில். (5866)

## விநியோகம்

Prima Broiler, குஞ்சுகள் (Prima, Hijira, Green Valley) Prima வெள்ளை, சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் 25.07.2002 வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். எம்மிடம் Broiler குஞ்சுகள் வேண்டுவோரிடம் மட்டும் திருப்பி இறைச்சிக்கோழிகள் கொள்வனவு செய்யப்படும். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5768)

## கைரேகை பார்த்தல்

கைரேகை, ஜாதகம், எண் சோதிடம், திருமணப் பொருத்தம், தெய்வீக நூல் கட்ட அறியத் தொடர்புகொள்க: சோதிநாகரத்தினம், மெய்கண்டான் வீதி, இளவாலை வடக்கு, இளவாலை. (5183)

## தேவை

ஒரு வயோதிபத் தம்பதியினரைப் பராமரிக்க ஆண் அல்லது பெண் பராமரிப்பாளர் தேவை. தங்குமிட வசதி, உணவு வசதி உண்டு. தொடர்பு: R.ஸ்ரீமகேஸ்வரன், "முருகன் இறை", யாழ்.வீதி, மல்லாகம். (5953)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல், இணைந்த கணிதம் பல வருட கற்பித்தல் அனுபவம் கொண்ட ஆசிரியரினால் மிகச் சிறப்பாக A/L வினாத்தாள்கள் உட்படக் குறுகிய காலத்தில் கற்பிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுத்த ஆசிரியர். தொடர்பு: தினசரி 3 மணிக்குப் பின். R.பாலசுப்பிரமணியம் B.Sc.(Cey.) Dip. in Ed, 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (5962)

## வகுப்புகள்

ஆங்கில வகுப்புகள் அனைத்தும் வழமைபோல் நடைபெறுகின்றன. தொடர்பு: கோ.சுப்பிரமணியம், 62, பழம் றோட், கந்தர்மடம். (5936)

---

உ
சிவமயம்

### ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானம் - சித்தன்கேணி

### பஞ்சரத பவனியும் பரிசளிப்பு வைபவமும்

இன்று (14.07.2002) ஞாயிற்றுக்கிழமை பஞ்சரதபவனி காலை 8 மணிமுதல் வசந்த மண்டப பூஜைகளுடன் ஆரம்பமாகும்.

**பரிசளிப்பு நிகழ்வு (பகல் 10 மணி)**

தலைமை: பிரம்மஸ்ரீ ஞா.சபாரத்தினசர்மா

ஆசிகள்: சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் (மஹோற்சவ குரு)

அருள் ஆசிகள்: சிவஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்)

சிறப்பு விருந்தினர்: பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் (கலைப்பீடாதிபதி- யாழ். பல்கலைக்கழகம்)

தேவஸ்தானத்தால் மாணவர்கள் மத்தியில் சமய, கிரியை பற்றிய அறிவூட்டலுக்காக நடத்தப்பட்ட ஆன்மீகப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள 55 பேருக்கு தங்கப் பதக்கம் உட்பட பல பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

- தேவஸ்தானம்.

விளம்பர அன்பளிப்பு:
ஹேமா ஸ்ரோஸ், பண்ணாகம். (5933) அம்பாள் ஸ்ரோஸ், வடக்கம்பரை.

---

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

மண்ணுலகில் 10 - 05 - 1923



விண்ணுலகில் 14 - 06 - 2002

### திருமதி முத்தையா சின்னப்பிள்ளை (பொன்னு)

இன்று (14.07.2002) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*9ஆம் கட்டை,*
*நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.*

- க.கந்தசாமி (மருமகன்)
(5964) குடும்பத்தினர்.

---

இறையியல் மாநாட்டின் இறுதி வழிபாடும் வண.அறிவர் D.T.நைல்ஸ் அவர்களின் வாழ்க்கைக்கும் இறைபணிக்குமான நன்றிசெலுத்தும் வழிபாடும்

காலம்: 17.07.2002 புதன்கிழமை பி.ப. 4.30 மணி
இடம்: கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம், மருதனார்மடம்.
அருளுரை: அதி.வண.டுலிப் டீ சிக்கேரா
*(ஆயர், கொழும்பு மறைமாவட்டம், இலங்கை திருச்சபை)*

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

வண.ஏ.ஏ.போல், தலைவர் — வண.என்.ஜே.ஞானப்பொன்ராஜா, காரியதரிசி

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம்

குறிப்பு: *சபைகளில் அறிவித்து சபை மக்கள் பங்குபற்ற வாகன வசதி ஏற்படுத்தி ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.* (5961)

---

## பாதாளக் கிணற்றில் மோட்டார் சைக்கிள்/சைக்கிள் சாகசம்

வன்னிப் பெருநிலப் பரப்பில் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் பராமரிக்கப்படும் ஆதரவற்ற, பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்களின் வளர்ச்சி நிதிக்காக யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் ஆதரவில் நடைபெறவுள்ள

### சாகஸ நிகழ்வு

*காலம்:* 14ஆம், 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் காலை 10 மணிமுதல்
*இடம்:* யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மைதானம்.

*பிரவேசக் கட்டணம்:*
மாணவர்களுக்கு: 30/=
ஏனையோருக்கு: 40 /=

(சி-22932)

*நுழைவுச் சீட்டு நுழைவாயிலிலும் விளம்பர வாகனத்திலும் விற்பனையாகிறது.*

---

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 03 - 10 - 1948



உதிர்வு 05 - 06 - 2002

### அமரர் இராசலிங்கம் அமரசோதி

அன்புத் தந்தையே எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே எம்மை பண்போடும் பாசத்தோடும் வளர்த்தெடுத்த அன்புத் தெய்வமே!

***உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.***

05.06.2002 அன்று கொழும்பில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு சகல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அத்தோடு தொலைபேசிமூலமாக தொடர்புகொண்டு தமது அனுதாபங்களைத் தெரிவித்து எமது துக்க துயரங்களில் பங்கேற்ற அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (14.07.2002) நிகழும் அன்னாரின் ஆத்மசாந்திக்கான பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.170, கொழும்புத்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (5957)

பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.

---

## மரண அறிவித்தல்

### செல்லமுத்து மகாலிங்கம்

பருத்தித்துறை, விஸ்வகுல ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லமுத்து மகாலிங்கம் நேற்று (13.07.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் ஜெயசூரியா (கொழும்பு), ஜெயகௌரி, ஜெயகெங்கா (பாகவட்டி றோ.க.த.க.பாடசாலை, பருத்தித்துறை; யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை), ஜெயசாந்தா, ஜெயசெல்லமுத்து (நோர்வே), ஜெயநாதன், (சிவமகால ஜுவெல்லறி & பான்ஸி ஹவுஸ், பருத்தித்துறை), காலஞ்சென்ற ஜெயமாலா மற்றும் ஜெயலிங்கம் (ஜேர்மனி), ஜெயந்தி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ரதிகுமாரி, தர்மராஜா (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், பெருந்தெருக்கள் திணைக்களம்), ரட்ணராஜா (இரசாயனக் கூட்டுத்தாபனம், பரந்தன்), கஸ்தூரி, சிவகுமாரன் (பொறியியலாளர், மகாவலி அபிவிருத்திச் சபை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2002) ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறையில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.30 மணிக்கு, பருத்தித்துறை கோரியடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விஸ்வகுல ஒழுங்கை,*
*புலோலி [illegible], பருத்தித்துறை.* (5958)

தகவல்:
ம.ஜெயநாதன் (மகன்)

# குடாநாட்டின் அனைத்து வீடுகளுக்கும் மூன்று மாதங்களுக்குள் மின்சாரம்!

## அமைச்சர் கரு ஜெயசூரியா உறுதி

யாழ்.மாணவர்களின் கோரிக்கையை அரசு நிறைவேற்றி விட்டது. 48 ஆயிரம் வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் மூன்று மாதங்களுக்குள் யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுவிடும். இதற்கான ஏற்பாடுகளைத் துரிதப்படுத்தி உள்ளோம்.

- எரிசக்திகள் மின்வலு அமைச்சர் கரு ஜெயசூரிய இவ்வாறு கூறியிருக்கின்றார்.

நேற்று சனிக்கிழமை கடவத்தையில் உள்ள தனது சொந்த இல்லத்தில் தமிழ்ப் பத்திரிகையாளர்களை அமைச்சர் சந்தித்தார். இச்சந்திப்பின்போது அமைச்சர் கரு ஜெயசூரிய மேலும் கூறியதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பிரதமர் செய்துகொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தால் வடக்கும் தெற்கும் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளன.

பௌத்தர்கள் யாழ்ப்பாணத்திற்கும் தமிழர்கள் தென்பகுதிக்கும் எந்தவிதமான அச்ச உணர்வும் இன்றி வந்து போகின்றனர்.

அண்மையில் கொழும்புக்கு வந்த யாழ்.பாடசாலைகளின் மாணவர்களும் ஆசிரியர்களும் நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் என்னையும் சந்தித்தனர். அவர்கள் எம்மிடம் வேறு எதையுமே கேட்கவில்லை. தமக்கு மின்சாரத்தை உடனடியாக வழங்கவேண்டும் என்றனர். மின்சாரம் இல்லாததினால் தங்களுடைய கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் கூறினார்கள்.

யாழ்.மாணவர்களின் இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பிரதமர், காலதாமதமின்றி உடனடியாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி பணித்தார். இதன்படி மின்சார சபையினர் இரவு பகல் பாராது செயற்பட்டதால் உடனடியாக 48 ஆயிரம் வீடுகளுக்கு 24 மணி நேர மின்சாரம் வழங்கப்பட்டது. ஜூலை 25ஆம் திகதிதான் இதனை நிறைவேற்ற முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் யாழ்.மாவட்ட மின்சாரப் பொறியியலாளர்களும் ஊழியர்களும் காட்டிய ஒத்துழைப்பால் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே மின் விநியோகத்தை வழங்க முடிந்தது. இவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன் - என்றும் அமைச்சர் கூறினார்.

நான் எரிசக்தி, மின்வலு அமைச்சராகப் பொறுப்பேற்றபோது மின் வெட்டு கடுமையாக இருந்தது. மின்சாரசபை 17 ஆயிரத்து ஐந்நூறு கோடி ரூபாவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 21 ஆயிரம் கோடி ரூபாவும் நட்டத்தைக்காட்டின.

இதனையடுத்து நிர்வாகம் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. தகுதியான ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நான் பதவிக்கு வந்த சமயம் உறுதியளித்தபடி 180 நாள்களுக்குள் மின்வெட்டை நீக்கிவிட்டேன். இப்பொழுது மின்சாரசபை ஆதாயம் தரும் சபையாக மாறி வருகின்றது.

# புங்குடுதீவில் மீள்குடியமர்ந்தோர் உதவிகள் கிடைக்காததால் அவதி

சமாதானச் சூழல் ஏற்பட்ட பின்னர் புங்குடுதீவில் கணிசமான மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். ஆனால் மீளக்குடியமர்ந்தவர்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படுவதில் [illegible] காலதாமதமும் இருப்பதாக பொதுமக்கள் சார்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

[illegible] தீவின் தென்மேற்கு, முதலாம், நான்காம், ஐந்தாம், ஆறாம் [illegible] உள்ளடக்கிய கழுதைப்பிட்டித் துறைமுகச் சூழலில் 300 குடும்பங்கள்வரை குடியேறி உள்ளன.

[illegible] துறைமுகம் அமைந்துள்ள இப்பகுதியின் பிரதான [illegible] குடியாக இருப்பதால் 'பஸ்' சேவையை இம் மக்கள் பெற்றுக்கொள்ளமுடியாதுள்ளது. குறிகாட்டுவான் செல் [illegible] உள்ள கந்தசாமி கோயிலில் இருந்து பல மைல் [illegible] நடையாகவே இவர்கள் பயணிக்க வேண்டி [illegible] தீவின் கிழக்குப் பகுதியில் (8ஆம், 9ஆம், 10ஆம் [illegible]) 200 மீனவக் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள் [illegible] குறைபாட்டால் இவர்களும் அல்லற்படுகின்றனர்.

[illegible] இயங்கிவந்த ஒரே ஒரு மருத்துவமனையும், வைத்தியர்கள், ஊழியர்கள் இல்லாததால் இயங்கவில்லை. பல மைல் தொலைவில் உள்ள வேலணை, யாழ்நகர வைத்தியசாலைகளுக்கு மக்கள் அலைந்து திரியவேண்டியுள்ளது.

[illegible] கட்டத்தில் குடியேறிய, வறுமைக்கோட்டின் கீழ் [illegible] குடும்பங்களுக்கு இதுவரை வறுமை நிவாரணம் [illegible] வில்லை எனக் கூறப்படுகிறது.

# விலைப்பட்டியல் வைத்திராத கடைகள் மீது நடவடிக்கை

## யாழ்.அரச அதிபர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை14

விலைப்பட்டியலை மக்கள் பார்வைக்கு வைத்திராத வர்த்தக நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு எச்சரித்துள்ளார் யாழ். அரச அதிபர்.


விலைப்பட்டியலை காட்சிப்படுத்துவது தொடர்பாக யாழ். செயலக உள்நாட்டு வியாபாரக் கிளை வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே இந்த எச்சரிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்.நகரிலும் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் உள்ள கடைகளில், விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் பாவனைப் பொருள்களின் விற்பனை விலைகள் காட்சிக்குட்படுத்தப்படாமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பாவனைப் பொருள்களுக்கான விற்பனை விலைகளைப் பாவனையாளர்களுக்கு காட்சிக்கு வைத்தல் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின்படி முக்கியமானதொரு கடமையாகும்.

எனவே யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல வர்த்தகர்களும் தம்மிடமுள்ள விற்பனைப் பொருள்களுக்கான மொத்த, சில்லறை விற்பனை விலைகளை எழுதிக் காட்சிப்படுத்துமாறு மாவட்டத்தின் உள்நாட்டு வியாபாரப் பிரதி ஆணையாளர் என்ற வகையில் அரச அதிபர் பணித்துள்ளார்.

அத்துடன் மேற்படி விடயத்தினை நடைமுறைப்படுத்தாதோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார் என்றுள்ளது. (ஒ)



வீரமக்கள் தினத்தையொட்டி நேற்று புளொட் உறுப்பினர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் செய்தபோது எடுத்த படங்கள். *(படங்கள்:தேவராஜன்)*

### மீள்குடியமர அனுமதி கோரி

# கொழும்புத்துறை மக்கள் போராட்டத்துக்கு ஏற்பாடு

கொழும்புத்துறை, ஜூலை14

கொழும்புத்துறைப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து வசிக்கும் மக்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிய வருகிறது.

கொழும்புத்துறையின் பல்வேறு பகுதிகளில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து ஏனைய பகுதிகளில் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில், தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அதிகாரிகளிடம் இப்பகுதி மக்கள் அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்தும் முடிவுகிட்டவில்லை. இதனால் தற்போது போராட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர், அரச அதிபர், இராணுவ அதிகாரிகள், கொழும்புத்துறைப் பகுதி இராணுவப் பொறுப்பாளர் ஆகியோருக்குக் கடிதமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் -

தகுந்த பதில் கிடைக்காதவிடத்து எதிர்வரும் முதலாம் திகதிமுதல் கொழும்புத்துறை கணக்கர் சந்தியில் வீதி மறிப்புப் போராட்டத்தை முதற்கட்டமாக ஆரம்பித்து பின்னர் யாழ்செயலகத்திற்கும் அப்போராட்டத்தை விஸ்தரிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் - அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வளன்புரம், எழிலூர், கொழும்புத்துறை கிழக்கு, [illegible] வடலி, நெடுங்குளம், [illegible] மணிப்புரி, உதயபுரம் பகுதிகளில் பொது அமைப்புக்கள் இம் மறியல் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்துள்ளன. (ஒ-ரி)

**நாளை**

ஆனி 31
திங்கட்கிழமை
(15.07.2002)
திதி : பஞ்சமி
காலை 7.05 வரை.
சஷ்டி
பின்னிரவு 4.38 வரை
நட்சத்திரம்: உத்தரம்
பின் இரவு 2.44 வரை
ஆனி உத்தர நன்னாள்
சுபநேரம் : 12.00 - 1.30
ராகுகாலம் : 7.30 - 9.00
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

அமைதியில் அழகின் நிறைவுத் தன்மை இருக்கின்றது. பகைமையில் அல்ல.

# உதயன்

## ஹர்த்தாலுக்கு தடை விதிக்கலாமா?

மோதல்களுக்கு வழிவகுக்கப்படக்கூடிய பிரதேசங்களில் ஹர்த்தால்கள் நடத்துவதை நிறுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

கிழக்கு மாகாணச் சம்பவங்கள் தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை விடுத்து நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இவ்வாறு அறிவித்தார்.

அதாவது சர்ச்சைக்குரிய பிரதேசங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யப்பட்டால் பாதுகாப்புப் படையினர் தமது இரும்புக்கரம் கொண்டு அதைத் தடைசெய்வர் என்பதுதான் இந்த அறிவிப்பின் விளக்கம்.

பொதுசனப் பாதுகாப்பு விவகாரத்தைக் கவனத்தில் எடுத்து நன்னோக்குடன் அவர் விடுத்த அறிவிப்பாக இதற்கு வியாக்கியானம் கூற முற்பட்டாலும், அரசின் இயலாத் தன்மையை இந்த அறிவிப்பு அப்பட்டமாக உலகுக்குப் பறைசாற்றத் தவறவில்லை என்பது மட்டும் உண்மை.

ஹர்த்தால் என்பது பொதுமக்கள் தங்கள் உணர்வை அமைதி முறையில் வெளிப்படுத்தும் ஒரு வழி; வடிகால்.

ஹர்த்தால் என்ற பெயரில் பொதுமக்களை அச்சுறுத்தி அந்த வழிக்கு பொதுமக்களை இணங்க வைப்பது தவறானது.

அதேபோன்று, அமைதியாக ஹர்த்தால் செய்ய முற்படும் பொதுமக்களை மிரட்டி ஹர்த்தால் செய்யவிடாமல் அவர்களைத் தடுப்பதும் தவறானது.

அப்படி பொதுமக்களை மிரட்டி கடையடைப்பு, ஹர்த்தால், எதிர்ப்பு நிகழ்வுகள் போன்றவற்றை மேற்கொள்ள அல்லது ஹர்த்தால் செய்யும் பொதுமக்களை மிரட்டி ஹர்த்தால் செய்யவிடாமல் தடுக்க முயலும் சக்திகளுக்கு எதிராக நாட்டின் காவலர்களின் கரங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது நியாயமானதே.

ஆனால், அதைச் செய்ய முடியாத - செய்ய இயலாத - நிலைமையில் பாதுகாப்புப் படைகள் இருக்கின்றன என்ற காரணத்தால் மக்களின் உணர்வை - கருத்தை - எண்ணத்தை - எதிர்ப்பை - வெளிப்படுத்தும் ஓர் அஹிம்சை வழியான நடவடிக்கையை துருப்புக்களைக் கொண்டு அடக்கி, ஒட்டுமொத்தமாகத் தடை செய்வது ஜனநாயக விரோதச் செயலாகும்; வெறும் அடக்குமுறை நடவடிக்கையாகும்.

'ஹர்த்தால்' நடவடிக்கைகளையே ஒட்டுமொத்தமாகத் தடுப்போம் என்று அறிவிப்பதற்குப் பதிலாக -

பொதுமக்களை அச்சுறுத்தி ஹர்த்தால் அனுஷ்டிக்க வைப்பதையோ அல்லது ஹர்த்தால் அனுஷ்டிப்போரை அச்சுறுத்தச் செய்வதையோ தடுப்போம்; தடை செய்வோம் என்று பாதுகாப்பு அமைச்சர் அறிவித்திருந்தால் அது வரவேற்கத் தக்கதாக இருந்திருக்கும்.

அதை விடுத்து, ஹர்த்தால் நடவடிக்கையையே முற்றாகத் தடுப்போம் என்று அவர் அறிவித்திருப்பது காலுக்கு அளவாகச் சப்பாத்தைச் சரி செய்வதை விடுத்து சப்பாத்துக்கு அளவாகக் காலை வெட்டுவது போன்றதாகும்.

கிழக்கில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை அடுத்தே இத்தகைய முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சர் இப்போது அறிவித்திருக்கின்றார்.

ஆனால், மக்கள் தமது எதிர்ப்புணர்வை இது போன்ற அஹிம்சை வழிகளில் காட்ட முயலும்போது, விவகாரம் தங்களுக்கு எதிராகப்போகும் என்று படைதரப்பு உணர்ந்தால் இதுபோன்ற வழிமுறையைத்தான் கடைப்பிடிக்கும், கடைப்பிடித்தன என்பதை புதிய பாதுகாப்பு அமைச்சருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில நிலைகொண்டிருந்த, ஆயுதக் குழு ஒன்று, தங்களின் வேடத்தை அம்பலப்படுத்திக்கொண்டிருந்த 'உதயன்' மீது சீற்றம் கொண்டு உதயன் அலுவலகத்தைக் குண்டு வீசித் தாக்கியது. இதைக் கண்டித்து யாழ். பத்திரிகையாளர்கள் யாழ்.நகரின் மத்தியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். அந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் குடாநாட்டு வர்த்தகர்கள் இரண்டு மணி நேரம் தமது வர்த்தக நிலையங்களைப் பூட்டி பத்திரிகையாளர்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட விரும்பினர். தமது விருப்பை முற்கூட்டியே அறிவித்து, அந்த நேரத்தில் கடைகளைப் பூட்ட முனைந்தனர். ஆனால், குடாநாட்டைத் தமது 'கொடும்பிடியில்' வைத்திருந்த இராணுவம் வர்த்தகர்களும், பொதுமக்களும் தமது உணர்வை - எதிர்ப்பை - அஹிம்சை ரீதியாக வெளிப்படுத்த விடாமல் தமது ஆயுத பலம் கொண்டு அதனைத் தடைசெய்தனர்; அடக்கினர்.

அத்தகைய கெடுபிடிப்போக்கின் ஒரு வெளிப்பாடாகவே ஹர்த்தால்களைத் தடைசெய்யும் இப்போதைய அறிவிப்பையும் கொள்ளவேண்டியுள்ளது.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 - 02 - 1910

மறைவு 24 - 06 - 2001

## அமரர் கந்தையா குமாரசாமி

(உடையார்)

ஆனி சதுர்த்தி திதியிலும்
ஆயிலிய நட்சத்திரத்திலும்
அமரரான அச்சுவேலி
கோவிற்பற்று முன்னாள்
உடையாரும் குருபாவாவின்
சீடனுமாகிய மூளாய் கந்தையா
குமாரசாமி (உடையார்) அவர்களை இன்று
நினைவு கூருகின்றோம்.

(C/22917)

உற்றார், உறவினர்,
மகன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

உடையா வீடு,
மூளாய், சுழிபுரம்.

## நோர்வே தூதுவருடன் இந்திய அமைச்சர் தொலைபேசியில் பேச்சு

கொழும்பு,ஜூலை14

கொழும்பு வந்த இந்திய வெளி விவகார அமைச்சர் ஜஸ்வந் சின்ஹா நோர்வே தூதர் ஜோன் வெஸ்பேர்க் குடன் சமாதான முயற்சிகள் தொடர் பாகக் கலந்துரையாடியுள்ளார்.

தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய இருவரும் நேற்று முன்தினம் நேரடியாகச் சந்தித்துக் கலந்துரை யாடியதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

அரசுக்கும் - விடுதலைப் புலி களுக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு எடுக்கப்படும் முயற் சிகளில் எதிர்நோக்கப்பட்டுள்ள பிரச் சினைகள், தடைகள் தொடர்பாக நோர்வே தூதர் எடுத்துக் கூறியுள்ளார்.

இந்த விவகாரத்தில் இந்தியா வின் பங்களிப்புக் குறித்தும் இரு வரும் விவாதித்துள்ளனர். (ம-3)

## 'ஆத்மா' மீண்டும் வெளிவந்தது!

'ஆத்மா' சமூகவியல் சஞ்சிகை இரு வருட இடைவெளியின் பின் மீண்டும் வெளிவந்துள்ளது.

மனிதம் கலந்தாய்வுக்குழுவினரால வெளியிடப்படும் இவ்விதழ் (ஜூலை- ஓகஸ்ட்) இரு மாத இதழாகும்.

## விவசாய ஊக்குவிப்பு நடவடிக்கை

மருதங்கேணிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த மக்களிடையே வீட்டுத் தோட்டத்தினை ஊக்குவிப்பதற் காக விவசாய உபகரணங்களும், மரக கறி விதைகளும் வழங்கப்படவுள்ளன.

விவசாயத் திணைக்கள வெளிக கள உத்தியோத்தர்கள் இதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வுள்ளார்கள்.

செம்பியன்பற்று, மருதங்கேணி, உடுத்துறை, போக்கறுப்பு கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே இதற் கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படவுள்ளன. (3-182)


# கேள்விப் பத்திரம் கோரல்
## விதை பொருள்கள்

ACTION CONTRE LA FAIM

சர்வதேச தொண்டர் நிறுவனமான - பட்டினிக்கு எதிரான நிறுவனம் பெருமளவு தொகைகளில் விதை நெல், வீட்டு தோட்டம், மேட்டு நில செய்கை ஆகியவற்றுக்கான விதை பொருள்களை வழங்க தமது வட-கிழக்கு மாகாண நிவாரண திட்டங்களுக்கு விவரம் கோருகின்றார்கள்.

இதில் ஆர்வமுள்ளவர்கள் இதனுடன் தொடர்புடைய விவரங்கள் மற்றும் படிவங்களை கீழ்வரும் அலுவலக முகவரிகளில் கிழமை நாள்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பெறலாம்.

**பட்டினிக்கு எதிரான நிறுவனம்,**
**12/3, (டிக்கல்) வீதி, கொழும்பு-08**
**பட்டினிக்கு எதிரான நிறுவனம்,**
**281, டைக் வீதி, திருகோணமலை.**
**பட்டினிக்கு எதிரான நிறுவனம்,**
**5, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.**

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் கிடைக்க வேண்டிய இறுதிநாள் முதலாம் திகதி ஓகஸ்ட் 2002



# கேள்விப் பத்திரம் கோரல்
## விவசாய உபகரணங்கள்

ACTION CONTRE LA FAIM

சர்வதேச தொண்டர் நிறுவனமான பட்டினிக்கு எதிரான நிறுவனம் (ACTION CONTRE LA FAIM) தமது எதிர்கால திட்டத்திற்காக பின்வரும் விவசாய உபகரணங்களுக்குக் கூறுவிலை கோருகின்றது.

| உபகரணம் | எண்ணிக்கை |
|---|---|
| 8"x10" மண்வெட்டி | 5,000 |
| யாழ்ப்பாண கொடுவா கத்தி | 4,000 |
| குப்பைவாரி | 5,000 |
| அலவாங்கு | 4,250 |
| காட்டுக் கத்தி | 1,000 |
| உலோக வாளி (GI) | 4,000 |
| கை தெளிகருவி | 3,000 |
| வெட்டும் கத்திரி | 3,000 |
| அரிவாள் | 1,100 |
| யாழ்ப்பாண முக்கோண மண்வெட்டி பிடியுடன் | 500 |
| பூவாளி | 300 |

ஆர்வமுடையோர் விண்ணப்பப் படிவங்களை கீழ்வரும் ஏதாவது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் காலை 9 மணி - மாலை 5.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

*பட்டினிக்கெதிரான நிறுவனம்,*
*12/3, டிக்கல் வீதி, கொழும்பு - 08.*
*பட்டினிக்கெதிரான நிறுவனம்,*
*286, டைக் வீதி, திருகோணமலை.*
*பட்டினிக்கெதிரான நிறுவனம்,*
*5, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.*

விண்ணப்பங்களை முதலாம் திகதி ஓகஸ்ட் மாதம் 2002இற்கு முன் சமர்ப்பிக்கவும்.

(சி-22900)



# ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா

வழங்கும்

* சிக்கன் புரியாணி
* தான் தோறி சிக்கன் உணவு வகைகள்

இப்பொழுது சுடச்சுட உணவுப் பெட்டிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

வழமையான உணவுப் பொதிகள் நண்பகல் 12மணிமுதல் 3 மணிவரை.

* முன்கூட்டிப் பதிவுசெய்து கொள்ளவும்.

**ஜெசித்தாரா**
**19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**



# கெமரா பழுது பார்த்தல்

**1975 ஆம் ஆண்டில் இருந்து 25 வருடங்களுக்கு மேலாக, அனுபவமிக்க, விஷேட சேவையுடன் மக்கள் மத்தியில் நன் மதிப்பையும், பாராட்டையும் பெற்றுக் கொண்ட விசுவாசமிக்க சேர்விஸ் சென்டர்.**

**திறமை வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் 40 பேர்களுடன், அதி நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு, ஒரே நாளில் கொம்பியூட்டர் மயப்படுத்தப்பட்ட துரித சேவை. ஒரு வருட உத்தரவாதம்!**




(C/22884)

GRAYON

**டிஜிட்டல், ஸ்டில் & வீடியோ கெமரா, லென்சஸ், ஸூம் கெமரா பிளேக்ஸ்சேர்கியூற், பிளாஸ் கன்ஸ்**


# DURST ELECTRONICS (PVT) LTD.

364, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. போன்: 575480, 565756
P.G. மாட்டிலுக்கு எதிரிலும், நேஷனல் ஷோரூம் மற்றும் தோட்டம் ரேணுகா மத்தியிலும் (கடல் பக்கம்)



# முகவர்கள்

## EXEL இன் வடக்கு-கிழக்கு வலையமைப்பிற்குத் தேவை



EXEL, இலங்கையில் முதற் தரமான தரை, சுவர் ஓடுகள் மற்றும் குளியலறை சாதனங்களை யாவரும் வாங்கும் விலையில் இறக்குமதி செய்து விநியோகிக்கும் மிகப் பெரிய, முதன்மையான நிறுவனம். இது தனது விரைவாக விஸ்தரித்து வரும் வலையமைப்பில், பின்வரும் நகரங்களில் முகவர்களை இணைக்க விரும்புகிறது.

**திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் அம்பாறை**

உள்ளடக்கப்படும் தயாரிப்புகள்

EXEL

Floor Tiles | Sanitary-ware
Wall Tiles | Marble
Taps | Granite
Slate

தெரிவு செய்யப்படும் முகவர்களுக்கு சிறப்பு வசதிகள் வழங்கப்படும். EXEL, வலையமைப்பில் இணைய விரும்பும் முகவர்கள் தமது நிறுவனம் அமைந்துள்ள பிரதேசம், வசதிகள் மற்றும் ஏனைய நிறுவனத்தின் முழு விபரங்களுடன் விளம்பரத் தினத்திலிருந்து 2 வேலை வாரத்திற்குள் விண்ணப்பிக்கவும்.

விபரங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
*The Director*
**EXEL Showroom**
446 R.A. De Mel Mawatha, Colombo 3.
Tel: 565697. Fax: 074 715008.
E-mail: exel@exellanka.com Web-site: www.exel-holdings.com

EXEL

## முஸ்லிம் - தமிழ் சமூகங்கள்
# பிரச்சினைகளை பேசித் தீர்க்கவேண்டும்
# அரசியல் பலத்தால் அணுகக்கூடாது!
### கரிகாலன் தெரிவிப்பு

வாழைச்சேனை,ஜூலை14

எமக்குள் ஏற்படும் பிரச்சினைகளை இரு சமூகங்களும் பேசித் தீர்க்க வேண்டும். அரசியல் பலத்தின் மூலமோ அதிகாரிகளின் அனுசரணையுடனோ எதையும் சாதிக்கக் கூடாது. அவ்வாறான அணுகுமுறை தவறானது.

- இவ்வாறு கூறியிருக்கிறார் மட்டக்களப்பு - அம்பாறை சிறப்பு அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன்.

ஓட்டமாவடி, விவசாயிகள் மத்தியில் நேற்றுப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய அமைதி காக்கும் படை இங்கு நிலை கொண்டிருந்த காலத்தில் உணவளித்து எமது இயக்கத்திற்கு உதவி செய்தவர்கள் ஓட்டமாவடி மக்கள். போராட்டத்திற்கு வலுவளித்த இந்த மக்களை நாம் மறக்கமுடியாது.

சமாதான காலத்தில் கலவரம் வந்தது ஜீரணிக்க முடியாத இனி மேலும் இனங்களுக்கிடையில் பிரச்சினை வருவதற்கு அனுமதிக்கக் கூடாது. நல்லுறவைப் பேணுவதற்கு இரண்டு இனங்களின் மத்தியில் இருந்தும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்குழுக்களுக்கு இரண்டு சமூகங்களும் கட்டுப்படவேண்டும். எதிர்காலத்தில் தீர்வு வரும்போது முஸ்லிம்களின் நலனும் பாதுகாக்கப்படும். எமது மக்களின் அபிலாஷைகள் எவையோ அவற்றை நிறைவேற்றுவோம்.

அரசு மக்களின் ஆதரவுடன் உருவானது. அந்த மக்களின் அபிலாஷைகளை அரசு நிறைவேற்ற வேண்டும். எமது இயக்கமும் மக்களின் ஆதரவைப் பெற்றது. ஆகவே மக்களின் அபிலாஷைகளை நோக்கியே எமது வேலைத்திட்டங்கள் அமையும்.

முன்னர் எமது இயக்கத்தினரின் பிரதான போக்குவரத்து மார்க்கமாக மூக்கர்கல் பிரதேசம் இருந்தது. இதன் காரணமாகவே மூக்கர்கல் பிரதேசம் போக்குவரத்துக்காக தடை செய்யப்பட்டதுடன் விவசாயச் செய்கைக்கும் தடைசெய்யப்பட்டது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இப்பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்டுள்ள விவசாய நிலங்களுக்கு முஸ்லிம் விவசாயிகள் வருவது தடைப்பட்டிருந்தது. இனிமேல் முஸ்லிம் விவசாயிகள் அச்சமின்றி வரலாம். இனங்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டதன் காரணமாக இரண்டு சமூகங்களுக்கும் பெரிய பாதிப்புகளும், இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. இழப்புக்களில் இருந்து மீள்வதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

முஸ்லிம் தலைவர்களும் எமது தலைவரும் ஒப்பந்தங்கள், பேச்சுக்கள் என்பவற்றை நடத்தி உள்ளார்கள். அவற்றை நாம் நிறைவேற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் கொள்கைதிட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிசாஹிர் மௌலானா, மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.விசு, ஆண்டான்குள அரசியல் பொறுப்பாளர் சேனாதிராஜா, மேஜர் பேர்ட்டிபெரேரா, கிராம அதிகாரி எம்.எம்.ஹனிபா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம)

# பலாலி - இரத்மலானை சேவையில் மற்றொரு தனியார் விமான நிறுவனம்

கொழும்பு,ஜூலை14

யாழ்ப்பாணத்துக்கான இரண்டாவது தனியார் விமான சேவை 'செரண்டிப் எக்ஸ்பிரஸ்' அடுத்த மாத முதல் வாரத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது.

52 பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய அன்ரனோவ் ரக (ஏ.என் - 24) விமானம் இந்த சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது. இந்த விமானம் சனி, ஞாயிற்றுக் கிழமைகள் தவிர்ந்த ஏனைய வார நாள்களில் தினசரி இருவழித் தடத்திலும் இரு சேவைகளை நடத்தும்.

கொழும்பில் இருந்து காலை 8மணிக்கும் பிற்பகல் 2மணிக்கும் புறப்படும் இந்த விமானம் பலாலியில் இருந்து காலை 10மணிக்கும் மாலை 4 மணிக்கும் பயணிகளை ஏற்றிக்கொண்டு திரும்பும். (ம)

# இலங்கை - இந்திய பாலம் குறித்த சாத்தியக் கூறு ஆய்வுக்கு ஒப்பந்தம்

கொழும்பு,ஜூலை14

பாக்கு நீரிணை ஊடாக இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் பாலத்தை அமைப்பது பற்றிய சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்படவிருக்கிறது.

இலங்கை முதலீட்டுச்சபை இந்தப் பாலத்தை அமைப்பது தொடர்பான விரிவான அறிக்கையைத் தயாரித்திருக்கிறது.

தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான தூரம் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இத்தூரத்துக்கான பாலத்தை நிர்மாணிக்க 88கோடி டொலர் செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது.

இப்பாலத்தினூடாக ரயில் பாதை உட்பட ஆறு வழிப்பாதை ஒன்றும் நிர்மாணிக்கப்படும்.

கனடா, சுவீடன், சிங்கப்பூர் ஆகிய நாடுகள் பாலம் அமைக்கும் இத் திடடம் குறித்து ஆர்வம் காட்டியிருக்கின்றன. (ம)

## செஞ்சிலுவையுடன் தொடர்பு கொள்ள கோரிக்கை

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்.அலுவலகத்துடன் பின்வருவோரை உடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பத்தமேனி, அச்சுவேலியியைச் சேர்ந்த சுவர்ணா ராஜேந்திரம், சுமதி ராஜேந்திரம், நல்லையா செல்லையா மற்றும் கொழும்புத்துறையைச் சேர்ந்த நல்லையா குலேந்திரன், குலேந்திரன் இன்பம் பரிமளம், குலேந்திரன் பிரதீபன்-

சுழிபுரத்தைச் சேர்ந்த செல்வராசா ராணி, சபாரட்ணம் ராசம்மா மற்றும் காங்கேசன்துறையைச் சேர்ந்த டாக்டர் சுப்பிரமணியம் பொன்னம்பலம் ஆகியோரே இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர். (எ)

# வல்வெட்டித்துறைத் தபாலக தொலைபேசி வசதி துண்டிப்பு

கரவெட்டி,ஜூலை14

வல்வெட்டித்துறை தபால் நிலையத்தில் இதுவரை காலமும் பொதுமக்கள் பாவனைக்கென வழங்கப்பட்டிருந்த தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவருமான எம்.கே. சிவாஜிலிங்கம் நகரசபைக்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்படி தபால் நிலையத்துக்கென தொலைபேசி வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருந்தார் எனினும் மேற்படி சேவை மூலம் பெறப்பட்டதாகக் கூறப்படும் பணம் தபால், தந்தி அமைச்சுக்கே இதுவரைகாலமும் அனுப்பப்பட்டு வந்தது என்றும் -

தற்போது தொலைபேசி இணைப்பில் உள்ள சூரியகலத்துக்கான கட்டணம் செலுத்தப்படவில்லை எனக் கூறியே தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் - கூறப்பட்டுள்ளது. (எ-70)

# தபாற்பொதி சேவையை ஆரம்பிக்க இதுவரை அனுமதி கிடைக்கவில்லை!
## யாழ்.பிரதம தபாலகத்துக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை14

ஏ-9 தரைப்பாதை திறக்கப்பட்டு சுமுகமான தபால் போக்குவரத்து இடம்பெற்று வருகின்றபோதிலும் தபாற்பொதிச் சேவையை ஆரம்பிப்பது குறித்து தபால்மா அதிபரிடம் இருந்து இதுவரையிலும் உத்தியோகபூர்வ அறிவித்தல் வழங்கப்படவில்லையென யாழ்ப்பாணத் தபாலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு - கிழக்கில் யுத்த சூழ்நிலை உருவானதன் பின்னர் தபால்மா அதிபரினால் பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தபாற்பொதிகள் விநியோகிக்கும் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

தற்போது ஒரு சுமுகநிலை தோன்றியுள்ளபோதிலும் உத்தியோகபூர்வமாக தபாற்பொதிகளை குடாநாட்டுத் தபாலகங்களில் ஏற்றுக்கொள்வது சம்பந்தமான அறிவித்தல் இதுவரை வழங்கப்படவில்லை.

எனினும் சந்தேகத்துக்கு இடமில்லாத புத்தகங்கள், பத்திரிகைகள், ஒளிநாடாக்கள், துணிவகைகள் போன்றவை அடங்கிய தபாற்பொதிகளை மனிதாபிமான அடிப்படையில் தற்போது ஏற்று, அனுப்பிவருவதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து உத்தியோகபூர்வமான அறிவித்தல் கிடைத்தால் தபாற்பொதி சேவையினை விரிவுபடுத்த இலகுவாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-12)

# வைகோ கைது குறித்து தமிழ்த் தலைவர்கள் கருத்து

கொழும்பு,ஜூலை14

ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை குறித்து தமிழ் அரசியல் தலைவர்கள் சிலர் கருதது தெரிவித்தனர்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கூறியதாவது:-

வைகோ கைது செய்யப்பட்டமை ஒரு அப்பட்டமான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை. அதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். மத்தியில் ஆட்சி நடத்தும் டில்லி அரசிடம் ஜெயலலிதா அரசு ஆலோசனை பெறாமல் ஏன் இந்தக் கைதை மேற்கொண்டது என்று தெரியவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் கருத்து:-

இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில் தீர்வு ஏற்படக்கூடிய காலகட்டம் கைகூடியிருக்கும் இந்த வேளையில் இப்படியான சம்பவங்களை இரு நாடுகளும் தவிர்த்துக் கொள்வது நல்லது.

மற்றும்படி வைகோ கைது சரியென்றோ அல்லது பிழையென்றோ அல்லது டில்லி அரசின் குற்றம் என்றோ எந்தக் கருத்தையும் நான் கூற விரும்பவில்லை.

புளொட் தலைவர் த.சித்தார்த்தனின் கருத்து:-

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா உட்பட அனைவரதும் ஆதரவு தேவை. அது காலத்தின் கட்டாயம். ஆகவே இப்படியான அதிரடி நடவடிக்கைகளை விட்டுவிட்டு எந்த விவகாரமானாலும் சுமுகமாகப் பேசித் தீர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும். இல்லையேல் அது அரசு - புலிகள் பேச்சுக்குக் குந்தகமாக அமையலாம்.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கூறியதாவது:-

தமது சட்ட ஒழுங்குடன் சம்பந்தப்பட்ட விடயம் ஒன்றை தமிழ் நாட்டு அரசு ஆற்றியிருக்கிறது. கிளிநொச்சியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்திய விவகாரங்கள் தொடர்பாக புலிகளின் தலைவர் பிரபாகரன் அளித்த பதில்கள் இந்தியாவை உசுப்பி விட்டிருக்கின்றன.

வைகோ கைது விடயம் போன்ற நடவடிக்கைகள் மூலம் அவை வெளிப்படுத்தப்படுகின்றன. கடந்த கால காழ்ப்புணர்ச்சிகள் எதிரொலிக்கப்படுகின்றன. மத்தியில் நடைபெறும் தற்போதைய ஆட்சி மாறி, காங்கிரஸ் பதவிக்கு வந்தால் ஜெயலலிதா - சோனியா கூட்டணி மேற்கொள்ளும் புலி எதிர்ப்பு நடவடிக்கைகள் இதைவிட மோசமாக அமையும்.

- இவ்வாறு அவர் கூறினார். (ம)

# கற்கோவளத்தில் மிதிவெடி அபாயம்; கவனிப்பார் எவருமே இல்லையா?
## அப்பிரதேச மக்கள் விசனம்

பருத்தித்துறை கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை இருந்த பகுதியில் மிதிவெடிகள் அப்புறப்படுத்தாமையினால் அப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர முடியாதநிலை இருந்து வருவதுடன், பொதுமக்களும் கால்நடைகளும் மிதிவெடிகளால் பெரும் அனர்த்தங்களை எதிர்நோகக வேணடியிருப்பதாகக் கூறப்படுகிறது.

குடாநாட்டைப் படையினர் கைப்பற்றியதைத் தொடர்ந்து இப்பகுதியில் படையினர் முகாம் அமைத்திருந்ததுடன், தமது பாதுகாப்புக் கருதி பெருமளவில் மிதிவெடிகளையும் புதைத்திருந்தனர்.

அந்த இடத்திலிருந்து கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் இராணுவத்தினர் வெளியேறி வேறிடம் ஒன்றில் முகாம் அமைத்துள்ளபோதிலும், இப் பகுதியில் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் அப்புறப்படுத்தப்படவில்லை.

மேற்படி மிதிவெடிகளால் கடந்த காலங்களில் இருவர் கால்களை இழந்துள்ளனர்; 50 மாடுகள் கால்களை இழந்துள்ளன. இதைத் தவிர ஆடுகளும் மிதிவெடிகளில் சிக்கி கால்களை இழந்துள்ளன.

இதேவேளை - இந்தப் பகுதிகளில் மேய்ச்சலுக்காகச் செல்லும் கால்நடைகள் வாரத்தில் ஒன்றாவது மிதிவெடிக்குள் சிக்கி உறுப்புக்களை இழப்பது வழமையாகிவிட்டது எனவும் கூறப்படுகிறது.

மேறபடி மிதிவெடிகளை அப்புறப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்கப்படுமென கடந்த ஓகஸ்ட் மாதத்தில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் விஜேசூரியா உறுதி அளித்திருந்தார். ஆனால், இந்த உறுதிமொழிக்கு அமைய இதுவரை எதுவித நடவடிககையும் எடுக்கப்படவில்லை.

தும்பளை இலட்சுமணன் தோட்ட பிள்ளையார் ஆலய தொண்டர் சபை மற்றும் பல்வேறு பொது அமைப்புகள் இப்பகுதியில் உள்ள மிதிவெடிகளை அப்புறப்படுத்தி மக்கள் மீளக்குடியமரவும் அச்சமின்றி நடமாடவும் ஏற்பாடுகளைச் செய்துதருமாறு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.அரசாங்க அதிபர் ஆகியோருககு பல தடவை முறைப்பாடு செய்திருந்தும் இதுவரை உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என பொது மக்கள் தரப்பில் பலத்த விசனம் தெரிவிக்கப்பட்டது. (எ-173)

# சமாதான முயற்சிகளுக்கு இந்தியா முழு ஆதரவு!
## ஜஸ்வந் சின்ஹா தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை14

சமாதான நடைமுறைகளை முன்னெடுத்துச் செல்ல இலங்கை அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் முழு ஆதரவும் உண்டு என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சின்ஹா மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ ஆகியோருடன் நேற்று முன்தினம் நடத்திய பேச்சுக்களின் போதே இந்திய அமைச்சர் இந்தியாவின் ஆதரவை வலியுறுத்தினார்.

அமைச்சர் ஜஸ்வந் சின்ஹாவின் விஜயத்தை அடுத்து இலங்கை - இந்திய கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளின் தற்போதைய நிலையை இலங்கைத் தலைவர்கள் இந்திய அமைச்சரிடம் விளக்கினார்.

இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கான இந்தியாவின் கடப்பாட்டை இந்திய அமைச்சர் மீண்டும் வலியுறுத்தினார். இலங்கையின் சகல சமூகங்களினதும் நீதியான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் சமாதான, சமரச தீர்வு மூலம் நிரந்தர சமாதானத்தை மீண்டும் ஏற்படுத்தும் இந்தியாவின் கடப்பாட்டையும் அவர் வலியுறுத்தினார்.

சர்வதேச சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் உலகப் பயங்கரவாதம் ஒரு பயமுறுத்தல் என்பதை இரு தரப்பினரும் வலியுறுத்தினர். அதை ஒழிப்பதற்கான உலக முன் முயற்சிகளை ஆதரிக்கும் தமது கடப்பாடுகளை அவர்கள் உறுதிப்படுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் குறிதது வெளிவிவகார அமைச்சர்களின் பேச்சுக்களில் திருப்தி தெரிவிக்கப்பட்டது.

ரயில்வே துறையை மறுசீரமைக்க இந்தியாவின் உதவியை இலங்கை கோரியிருக்கின்றது. பெங்களூருக்கு இலங்கை எயர்லைன்ஸ் விரைவில் ஆரம்பிக்கவிருக்கும் விமானச் சேவைகள் குறித்து இரு தரப்பினரும் திருப்தி தெரிவித்தனர். (ம)

FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM

# FUJIFILM




யாழ்.குடாநாட்டின்
புகைப்படப்பிடிப்பாளருக்கும்
புகைப்படப் பிரியர்களுக்கும்
முக்கியமான மகிழ்ச்சியான செய்தியொன்று.

இலக்கம் 14, ஸ்ரீவெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணத்தை
முகவரியாகக் கொண்ட

# சிறி ழஜிற்றல் கலர் லாப்

உரிமையாளர் திரு.எஸ்.வி.ஸ்ரீதரன் அவர்கள்
புகழ்பெற்ற பியூஜி படச்சுருள்கள், கமராக்கள், இணைந்த
பிறபொருள்களை விநியோகிப்பதற்கு யாழ்.குடாநாட்டுக்கு
ஹேலிஸ் ஸ்தாபனத்தார் தமது விநியோகிப்பாளராக
நியமித்துள்ளார்கள் என்பதை பெருமையுடன் அறிவிக்கின்றார்கள்.

அவர்களது நற்பணிக்கு எம் நல்வாழ்த்துக்கள்!

ஹேலிஸ் கொன்சுயுமர் ப்ரடக்ஸ் லிமிரட்
ஸ்தாபனத்தாரின்
Photo Imaging
அலகின் முகாமைத்துவ அணியினர்.

# FUJIFILM





HAYLEYS
Consumer

**Hayleys Consumer Products Ltd.**
25, Foster Lane, Colombo 10, Sri Lanka.
Phone: 94 1 688956-9,
Fax: 94 1 688971.

(சி2927)

FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM

## ஜே.வி.பி., பொ.ஐ.முவினர் கூச்சல் குழப்பம்:

# நாடாளுமன்ற அமர்வில் அமளிதுமளி தொடர்ந்தது!

மாகாணசபை உறுப்பினர்கள் கடந்த புதன்கிழமை கொழும்பில் நடத்திய வீதிப் போராட்டம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அமளிதுமளியை ஏற்படுத்தியது. எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட பிரேரணை மீது விவாதம் நடத்தவிடாமல் எதிர்க்கட்சியினரே கூச்சலும் குழப்பமும் விளைவித்தனர். ஆளும்கட்சி உறுப்பினர்கள் சிலர் நாமும் சளைத்தவர்கள் அல்லர் என தமது பங்கிற்குக் கூச்சல் இட்டனர்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதம் நடந்து கொண்டிருந்தபோது பகல் 11.30 மணிக்கு சபை ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வேளையில் எதிர்க்கட்சி உறுப்பினரான முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

கடந்த 10ஆம் திகதி மாகாண சபை உறுப்பினர்கள் நடத்திய போராட்டம் தொடர்பாகவே அவர் பிரேரணையை முன்வைத்துப் பேசினார்.

தற்போதைய அரசு மாகாண சபைகளுக்கான நிதியை 50 வீதத்தால் குறைந்துவிட்டது. இதனால், மாகாண மட்டத்தில் எந்த ஓர் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியவில்லை. அரசு திட்டமிட்டே பழி வாங்குகிறது.

அரசின் இச்செயலைக் கண்டித்துக் கூட்டம் நடத்திய மாகாண சபை உறுப்பினர்களை பொலீஸார் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கி உள்ளனர். பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பிரதமரைச் சந்திக்க விடாமல் தடுத்துள்ளனர். இது ஜனநாயக உரிமைகளில் கை வைக்கும் ஒரு செயலாகும். இறுதியில் ஜனாதிபதியை சந்தித்து தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அவர்கள் கையளித்துள்ளனர்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தாக்கப்பட்டது ஏன்? அவர்கள் பிரதமரை சந்திக்க அனுமதி அளிக்காதது ஏன்? மாகாண சபைகளுக்கான நிதி குறைக்கப்பட்டது ஏன்? என்று கேள்விக் கணைகளைத் தொடுத்தார் மங்கள சமரவீர.

அவரது பேச்சுக்கு இடையிடையே



நாடாளுமன்றத்திலிருந்து....

ஜே.வி.பி. உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மேசைகளைத் தட்டினர். கூக்குரலிட்டு ஆரவாரப்படுத்தினர். இதனால் சில சமயங்களில் அவர் என்ன பேசுகின்றார் என்பது கூடப் புரியவில்லை. சபையில் அமைதி ஏற்படுத்த சபாநாயகர் மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பயன்தரவில்லை.

இந்தக் கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் சமுர்த்தி அமைச்சர் ஆர்.ஏ.டி சிறிசேன பேச ஆரம்பித்தார். அப்போதும் இதே நிலைதான். எனினும் அவர் தொடர்ந்து உரையாற்றினார்.

'ஜே.வி.பி. உறுப்பினர்களின் பரம்பரைக் குணம் கூச்சல் போடுவதும், குழப்பம் விளைவிப்பதும்தான். அக்குணம் இப்பொழுது பொ.ஐ.முன்னணிக்கும் ஒட்டிக் கொண்டதுதான் கவலை. உங்களுடைய ஆட்சியின் போது நாங்கள் அனுமதி பெற்று நடத்திய பொதுக்கூட்டங்கள் மீதும், ஊர்வலங்களின்போதும் அரசியல் காடைத் தனத்தைக் கட்டவிழ்த்து விட்டீர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் ஏன் பிரதமர் மீதும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினீர்கள். குண்டாந்தடித்தாக்குதல்களை நடத்தினீர்கள். பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் காயமடைந்தனர். உங்களுடைய அரசாங்கம் திறைசேரி கஜானாவையே காலியாக்கிவிட்டது. இப்போது உங்களுக்கு சம்பளம் கொடுக்கவே பணம் இல்லை. எனினும் பிரதமர் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு சம்பளம் வழங்குகின்றார். நாங்கள் அமைச்சர்களாக இருந்தும் சாதாரண எம்பிக்களின் சம்பளத்தையே பெறுகின்றோம்' என்று அமைச்சர் சிறிசேன கூறினார்.

தொடர்ந்து ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ச மற்றும் பொ.ஐ. முன்னணி உறுப்பினர்கள் சிலரும் பேசினர். ஆனால் எவருடைய பேச்சையுமே கேட்க முடியாதபடி அவையில் கூச்சலும் குழப்பமுமாக இருந்தது. இறுதியாக இப்பிரேரணைக்குப் பதில் அளித்து உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க பேசினார். அவருடைய பதிலையும் கேட்கவிடாமல் எதிர்க்கட்சியினர் கச்சல் போட்டனர். இவ்வேளையில சபாநாயகர் எதிர்க்கட்சியினரை எச்சரிக்கை செய்தார். இந்தப் பிரேரணை எதிர்க் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்டது. நீங்களே குழப்பம் விளைவித்தால அமைச்சருக்குப் பதில் அளிக்க முடியாமற்போய்விடும் எனக் குறிப்பிட்டுக் கண்டித்தார் அவர். அதன்பின் சபையில் சற்று அமைதி ஏற்பட்டது.

தொடர்ந்து பதில் அளித்த அமைச்சர் ஜோன் அமரதுங்க மேலும் கூறியதாவது:-

'முன்னைய அரசின் காலத்தில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியை வழங்க மறுத்தவர் ஜனாதிபதி. இன்று மாகாண சபைக்கான நிதி குறைக்கப்பட்டிருப்பதைப் பற்றிப் பேசுவது வேடிக்கையானது.

'உங்களுடைய காலத்தில் காலிமுக வீதி அதிதீவிர பாதுகாப்பு வலயமாக இருந்தது. ஒரு ஈ, காகம் கூட அங்கு செல்லமுடியாது. இப்போது பிரதமரை எந்த நேரத்திலும் சந்திக்க முடியும். பிரதமரின் அலுவலகத்திற்கு அறிவித்துவிட்டு செல்லலாம். ஆனால் எந்தவிதமான முன் அறிவித்தலும் இன்றி பொலீஸாரின் அனுமதி பெறாமல் கூட்டம் நடத்தியதோடு ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நடத்தி உள்ளனர். மாகாண சபை உறுப்பினர்கள் பொலீஸாரின் அனுமதி பெறாததினாலேயே பொலீஸார் ஊர்வலமாகச் செல்ல அனுமதிக்கவில்லை. அப்படி இருந்தும் பிரதிநிதிகளைப் பிரதமரின் செயலாளர் சந்தித்து மகஜரை வாங்கி உள்ளார். ஆனால், பொலீஸார் தாக்கினர் என்பது பொய். அப்படி தாக்கியதாக எந்த ஒரு பொலீஸிலும் முறைப்பாடுகள் செய்யப்படவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணி நாட்டில் அமைதி ஏற்படுவதை விரும்பவில்லை. அமைதியையும் சமாதான முன்னெடுப்புக்களையும் சீர்குலைப்பதற்காகவே அவர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி மக்களைத் திசை திருப்ப முனைகின்றனர்' என அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறினார்.(ஓ)

## தீர்வைக் காண்பதற்கு முன்னர் தேர்தல் திருத்தம் தேவைதானா?

### இரா.சம்பந்தன் எம்.பி. கேள்வி

தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டியது யுகத்தின் தேவை. ஆனால், அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சு நடைபெறவிருக்கும் இந்தவேளையில் - அரசியல் சீர்திருத்தம் ஒன்றைக் கொண்டுவருவதற்குமுன் - தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவர அவசரப்படக்கூடாது. அதனால், எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் கூறினார்.

தற்பொழுது நடைமுறையில் உள்ள தேர்தல் முறை கட்டாயமாக மாற்றி அமைக்கப்படவேண்டும். விருப்பு வாக்குமுறைகளினால் எதிர்க்கட்சி மோதல் மட்டுமன்றி உட்கட்சி மோதல்களும் இடம்பெற வாய்ப்பேற்படுகின்றது.

எனவே, விருப்பு வாக்குமுறை முற்றாக ஒழிக்கப்படவேண்டும். மேலும் உத்தேச திருத்தத்தின்படி செனட் சபை - கீழ் சபை என இரு சபைகள் அமைக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. அப்படியாயின் இவ்விரு சபைகளும் தன்னிச்சையாக இயங்கக்கூடாது. இருசபைகளும் ஒன்றோடொன்று தொடர்புடையவையாக இருக்க வேண்டும்.

தொகுதிவாரி, விகிதாசார தெரிவுகள் நடைபெறும்போது தொகுதிகளில் கட்சிகள் பெறும் வாக்குகளின் அடிப்படையில் விகிதாசாரத் தெரிவுகள் இடம்பெறவேண்டும்.

எது எப்படியோ தீர்வுத்திட்டத்தின் பின் அரசியல் சீர்திருத்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் இதனைப் பரிசீலனை செய்வதே சிறப்பாகும் என இரா.சம்பந்தன் எம்.பி. கூறினார்.

# வைகோவை விடுவிக்குமாறு கூட்டமைப்பு கோரிக்கை

## தமிழக, இந்திய அரசுகளிடம்

கொழும்பு,ஜூலை14

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக கழகத் தலைவர் வைகோவையும் அவருடன் தடுத்துவைக்கப்பட்டுள்ள கழகத்தின் தொண்டர்களையும் உடனடியாக விடுதலை செய்வதற்கு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய மத்திய அரசையும் தமிழக அரசையும் வேண்டுகின்றோம்.

வைகோவை விடுதலை செய்யும் நடவடிக்கை இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கான ஓர் அங்கீகாரமாக அமையும்.

தமிழ்த தேசிய கூட்டமைப்பு மேற கண்டவாறு தெரிவித்துள்ளது.

வைகோ கைது தொடர்பாக கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வைகோ கைது செய்யப்பட்டமை குறித்து தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு ஆழ்ந்த அதிர்ச்சியையும், மனவேதனையையும் தெரிவிக்கின்றது.

இலங்கைத் தமிழர்கள் சார்பாக தொடர்ந்து குரல் எழுப்பிய வைகோ தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதியானதும், நிரந்தரமானதுமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி வந்துள்ளார்.

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரசியல தீர்வை காணத் தவறிய விளைவுதான் ஆயுதப் போராட்டத்துக்கு அடிகோலியது என்ற கருத்தினை அவர் பகிரங்கமாக தெரிவித்து வந்திருப்பதோடு இக்காரணத்தினால் ஆயுதப் போராட்டம் நியாயமானது என்பதையும் வலியுறுத்தி வந்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்டிருக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தங்கள் காரணமாக ஆயுத மோதல் நிறுத்தப்பட்டிருப்பதுடன் ஒரு மூன்றாம் தரப்பு சர்வதேச அனுசரணையுடன் ஒரு சமாதானத் தீர்வை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இந்தியா உட்பட சர்வதேச சமூகம் இந்த சமாதான முயற்சிகளுக்கு தமது பூரண ஆதரவை வழங்கி வருகின்றது. அத்துடன் இனவேறுபாடுகளுக்கு அப்பால் இலங்கையில் உள்ள பெரும்பாலான மக்கள் இந்த முயற்சிகளுக்கு தங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு வழங்குகின்றார் என்ற காரணத்திற்காக வைகோ கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு ஆழ்ந்த விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் சமாதான பேச்சுக்கள் இலங்கை அரசிற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தான் நடைபெற வேண்டுமென்ற நிலைப்பாட்டிற்கு தங்கள் அபரிவிதமான ஒப்புதலை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வழங்கியுள்ளார்கள் என்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமானது - என்றுள்ளது. (ஒ-3)

## யோகாசன பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஜூலை14

பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் உத்தியோகஸ்தர்களின் நன்மை கருதி கச்சேரி - நல்லூர் வீதியில் அமைந்துள்ள சாந்திகம் உளவளத் துணை நிலையத்தில் வாரந்தோறும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 6 மணியில் இருந்து 7 மணிவரை யோகாசனப் பயிற்சி வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை முதல் இப்பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாக உள்ளன.

இதில் கலந்துகொள்ள விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் அன்றைய தினம் காலை குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-8)

## இலவச கணனிப் பயிற்சி

கொழும்புத்துறை,ஜூலை14

கொட்டடிக் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடத்தப்படும் இலவச கணனிப்பயிற்சி நெறிக்கு புதிதாக மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை நாளை திங்கட்கிழமை கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆர்வமுடையோர் பங்கு பற்றி பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஞமி)

# புலிகளின் இடைக்கால அரசில் தமிழ்ச் சமூகம் இராணுவமயமாகும்!

### சின்ஹாவிடம் ஈ.பி.டி.பி., புளொட் முறைப்பாடு

கொழும்பு,ஜூலை14

வடக்கு - கிழக்கிற்கான ஓர் இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் கையளிப்பது முழுத் தமிழ்ச் சமூகத்தையும் இராணுவ மயப்படுத்தலிலேயே போய்முடியும்.

கொழும்பு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவிடம் மேற்கண்டவாறு ஈ.பி.டி.பி.யும், புளொட்டும் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் நடந்த இந்திய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்புக் குறித்து ஈ.பி.டி.பி. விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் (ஈ.பி.டி.பி) தமிழீழ மக்கள் விடுதலைக கழகமும் (புளொட்) ஒன்றுசேர்ந்து இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவுடன் கொழும்பில சந்தித்தன. ஈ.பி.டி.பி. சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, கலாநிதி கே.விக்கினேஸ்வரன், புளொட் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். ஈ.பி.டி.பி. இந்திய அமைச்சரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைவில் பேச்சுக்களை ஆரம்பித்து அதனைத் தொடர்ந்து செல்வதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் தூதுக் குழு அமைச்சரிடம் கேட்டுக்கொண்டது.

அத்துடன், இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியாவுக்கு மரபுரிமையுடன் கூடிய பங்கொன்று உண்டு என்றும், உரிய நேரத்தில் இந்தியா அந்தப் பங்கை மேற்கொள்ளும் என்று தாம் நம்புவதாகவும் தூதுக்குழுவினர் எடுத்துக் கூறினர்.

புலிகளால் மேற்கொள்ளப்படும் கப்பம் வாங்குதல், ஆள்கடத்தல் மற்றும் ஏனைய இம்சைகள் காரணமாக வடக்கிலும் கிழக்கிலும் வாழும் மக்கள் படும் அவஸ்தைகளை ஈ.பி.டி.பியினர் அமைச்சருக்கு விளக்கிக் கூறினர்.

இலங்கையின் தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகமும், பன்மைத்துவமும் விளங்குவதற்கான அனைத்தையும் இந்தியா மேற்கொள்ள வேண்டுமென ஈ.பி.டி.பியினர் இந்திய அமைச்சரைக் கேட்டுக்கொண்டனர் - என்றுள்ளது.

(ஓ-3)

## சாவகச்சேரி சந்தை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,ஜூலை14

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த சாவகச்சேரி நவீன சந்தையை ஒரு கோடி ரூபா செலவில் புனரமைக்க வடக்கு புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அதிகாரசபை (றான்) நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையும் றானும் இணைந்து நவீன சந்தையைப் புனரமைக்க வேலைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் -


புனரமைப்பு வேலைகள் மூன்று மாதங்களுக்குள் செய்துமுடிக்கப்படும் எனவும் -

இணைப்பாளர் வ.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

(3-J17)

## பிறந்தநாள் வாழ்த்து

14-07-2002




### செல்வன் கு.அருண்

கனடா SCARBORONGH நகரில் இன்று தனது முதலாவது பிறந்தநாளை வெகுவிமரிசையாகக் கொண்டாடும் திரு. திருமதி குலசேகரம் - யோகேந்திரா தம்பதியினரின் செல்வப் புதல்வன் அருணை எல்லாச் சிறப்புக்களும் பெற்று இன்புற்று வாழ பெரியப்பா. பெரியம்மா. அக்கா. அண்ணா ஆகியோர் அன்புடன் வாழ்த்துகின்றனர்.

முதலி முருகன் கோயில் வீதி,
கொக்குவில் மேற்கு.

(5848)

தகவல்:
பெரியப்பா.

---

## 2002 ஜூன் மாதம் 20ஆம் திகதி தீவகத்தின் வேலணைப் பிரதேசத்தில் நடந்த சம்பவங்களை அறிக்கையிடுவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு

கௌரவ பிரதமரின் ஆலோசனைகளின்படி கௌரவ பாதுகாப்பு அமைச்சரினால் மேற்குறிப்பிட்ட சம்பவம் பற்றி விசாரணை செய்து அறிக்கையிடுவதற்காக குழுவொன்று நியமனஞ் செய்யப்பட்டுள்ளது.

இக்குழு பொதுமக்களின் சாட்சிகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2002 ஜூலை மாதம் 16ஆம் திகதியிலிருந்து ஜூலை மாதம் 19ஆம் திகதிவரை மு.ப. 10.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணி வரையிலான காலத்தினுள் யாழ்ப்பாணக் கச்சேரியில் நடைபெறவுள்ளது.

அதன் பின்னர் மேலும் சாட்சிகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஜூலை 21ஆம் திகதி பி.ப.2.00 மணியிலிருந்து 5.00 மணிவரையிலும் ஜூலை 22ஆம் திகதியிருந்து 24ஆம் திகதி வரை காலை 10.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரையிலும் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் இல.2/218 ஆம் அறையில் கூடவுள்ளது.

இது தொடர்பாக ஆர்வமுள்ள பொதுமக்கள் மேற்குறிப்பிட்ட நாள்களில் முன்வந்து காரணிகள் / சாட்சிகளைச் சமர்ப்பிக்குமாறு அறிவிப்பதோடு ஏதேனும் ஒரு காரணத்தால் பிரத்தியேகமாக சமுகமளிக்க முடியாதாயின் சத்தியக் கடதாசியொன்றின் வடிவத்தில் சமாதான நீதிவான் ஒருவரால் சான்றுபடுத்தி தமது காரணிகளை / சாட்சிகளைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்படுகின்றது.

எயார் வைஸ் மார்ஷல் ஹெரி குணதிலக்க - தலைவர்
(தொலைபேசி இல.698946)

திரு. சீ.வி.கே.சிவஞானம் - அங்கத்தவர்
திரு. ஓ.பீ.வீரசிங்க - அங்கத்தவர்

அறை இலக்கம் 2/218
பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபம்
கொழும்பு - 07.
2002 ஜூலை மாதம் 10ஆம் திகதி.

நாவலக்க கலுவெவ
குழுவின் செயலாளர்.

(C/22885)

---

## மாநகர சபை மாதாந்தக் கூட்டம்

யாழ்.மாநகர சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 17ஆம திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்மாநகர முதல்வர் செ.சுந்தையன் தலைமையில் நடைபெறும். (3-173)

## சாவகச்சேரியில் தேசிய சேமிப்பு வங்கி

சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கிக்கிளை நேற்றுமுன்தினம் காலை சாவகச்சேரியில் வடவலய பொது முகாமையாளர் லயன்ஸ் திஸாநாயக்காவினால் வைபவ ரீதியாக ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் பிரதித் பொது முகாமையாளர் எஸ்சிவபாலகணேசனும், தலைமை அலுவலகக் கடன் வழங்கல் பிரிவு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.இராசதுரை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச அரச, உள்ளூராட்சி, கூட்டுறவு ஆகிய திணைக்கள அதிகாரிகளும் வங்கி வடிக்கையாளர்களும் கலந்துகொண்டனர். (3-117)

## உரும்பிராய் லயன்ஸ் நிறைவு விழா

உரும்பிராய் லயன்ஸ் கழகம் உரிமப்பதிவு 3ஆம் ஆண்டு நிறைவும 2002/2003 ஆண்டுக்கான பணிசூட்டு வைபவமும் இன்று ஞாயிறுக்கிழமை காலை 10 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆராதனை மண்டபத்தில் லயன் வேசின்னத்துரை தலைமையில் இடம்பெறும். இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக மாவட்ட இணைப்பாளர் லயன். K.V.முத்துக்குமாரசுவாமி கலந்துகொள்வார். (3-ரி)


O/L, 10, 09

மாணவர்களே!

தமிழ்ப் பாடத்தில் அதிவிசேட சித்தி பெற ... (முத்திரை ...) ...

ஆசிரி... க.க...ருபன

80, அம்மன் கோயில் வீதி.

பண்டாரிக்குளம்,

வவுனியா.

(3171)

T.P: 024-22...


---

# ST.JOHN'S COLLEGE JAFFNA

## ANNUAL PRIZE GIVING 2002

Saturday the 20th July 2002
at 10.00 a.m.

*CHIEF GUEST*
Rt Rev Duleep de Chickera
Bishop of Colombo
&
Mrs Geetha de Chickera

*CHAIRMAN*
Ven S.P.Nesakumar
Archdeacon of Jaffna

Parents, Old Boys & Well-wishers
are cordially invited.

**Principal, Staff and Students.**

(C/22902)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடிமீது
1952 * 01 * 14



ஆண்டவன் அடிமீது
2001 * 07 * 26

திருமதி
### புவனேஸ்வரி சுப்பிரமணியம்

*தாயின்றி உலகில் தவிக்கின்றோம் நாம் அம்மா!*
*எப்போது நீர் வருவீர் ஓராண்டு சென்றதம்மா?*
*காய்ச்சல் வந்ததனால் காலனோ கவர்ந்து சென்றான்!*
*காலமெல்லாம் நும் நினைவால் வாடுகின்றோம் வருந்துகின்றோம்!!*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

நிரந்தர முகவரி:
*கைதடி - நாவற்குழி,*
*கைதடி.*

தற்காலிக முகவரி:
*புத்தூர் வடக்கு,*
*வைரவர் கோயிலடி.*

கணவர்:- சுப்பிரமணியம்
பிள்ளைகள்:- முகுந்தன், முரளிதரன்.

(5747)

---





அனைத்து போரோசொப்ட் 40g கிறீமுடன்,
ரூ.20.00 பெறுமதியான
போரோசொப்ட் சோப்
இலவசம்

சந்தைப்படுத்துவோர்
PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.

ஏக விநியோகஸ்தர்:-
JEGHAN PHARMACY.
NO.462/B, HOSPITAL ROAD,
JAFFNA. TEL.021-2194,3191


---


க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு குடும்பமாக பரிசுகளை வெல்லுங்கள்

க்லோகாட் ரயிலுடன் இன்றே இணையுங்கள்



முதலாவது அதிஷ்டமடையும் குடும்பத்திற்கு

இரண்டாவதாக அதிஷ்டமடையும் மூன்று குடும்பங்களுக்கு மூன்று பரிசுகள்

விற்பனையாளர்களுக்கும் பரிசு

ஆறுதல் பரிசுகள்

முதலாவதாக அனுப்பிவைப்போருக்கு

க்லோகாட்

# அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து விவசாயக் குழு கூட்டத்தில் ஆராய்வு

கொக்குவில்,ஜூலை14

யாழ்.மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் குடாநாட்டின் விவசாயக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டது.

யாழ்.செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புடன் தொடர்புடைய உதவித் திட்டங்கள் மற்றும் நல நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரையாற்றினர்.

யாழ்.மாவட்டத்தில் ஹற்றன் நஷனல் வங்கி 12 சதவீத வட்டியுடன் விவசாயக் கடன்களை வழங்குவதாகவும் -

இக்கடன்கள் விவசாயிகளின் தகைமையை அடிப்படையாகக் கொண்டு ஒரு விவசாயிக்கு ஏக்கர் ஒன்றுக்கு 35ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் என்றும் -

மேலதிகமாகத் தேவைப்படுமிடத்து 6 சதவீதம் கூடிய வட்டி வீதத்தில் மேலதிகத்தொகை வழங்கப்படும் எனவும் - மேற்படி வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கடன் கமநல சேவைகள் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் ஊடாக விண்ணப்பங்கள் சேகரிக்கப்பட்டு வழங்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பட்டினிக்கு எதிரான இயக்கப் பிரதிநிதி கருத்துத் தெரிவிக்கையில் பட்டினிக்கெதிரான இயக்கம் 23 கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 500 பயனாளிகளுக்கான வீட்டுத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த உள்ளதாகவும் -

கோழிக்குஞ்சுகள் வளர்ப்புத் திட்டத்தில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு 12 கிராம அலுவலர் பிரிவுகளில் கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவித்தார்.

கெயர் நிறுவனப் பிரதிநிதி கருத்துக் கூறுகையில்:-

விவசாயக் கிராமங்களை அண்டிய பகுதிகளில் விவசாய அபிவிருத்தி வேலைகளை அதிகளவில் செய்யவிருப்பதுடன், விவசய அபிவிருத்திக் கடன்திட்டம், பாதிக்கப்பட்டோர் நலன் திட்டம் போன்றவற்றை கிராம மட்ட ரீதியாக மேற்கொள்ள இருப்பதாகவும் - தெரிவித்தார்.

நியாப் திட்டத்தின் கீழ் இவ்வருடம் 40 குளங்கள் புனரமைப்பதற்கு முடிவுசெய்யப்பட்டு வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாய திட்டப் பணிப்பாளரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் - முதலில் 7 குளங்களைப் புனரமைக்க யாழ்.மாவட்ட விவசாயக குழுவின் அனுமதியை வழங்குமாறும் கமநல திணைக்கள உதவி ஆணையாளர் கேட்டுக்கொண்டார்.

மேலும், இத்திட்டத்தின்கீழ் குளங்கள், வீதிகள், குடிநீர்க் கிணறுகள் என்பன புனரமைக்கப்பட 9 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது - என்றும் தெரிவித்தார்.

கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தமது திணைக்களத்தினால் 4 விவசாய வங்கிகள் நல்லூர், கோப்பாய், உடுவில், வடமராட்சி ஆகிய இடங்களில் திறக்கப்பட இருப்பதாகத் தெரவித்தார். (ஒ-ரி)

# சர்வோதயப் பணிப்பாளர் யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம்,ஜூலை14

இலங்கை சர்வோதய அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வின்னியா ஆரியரத்ன நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

நாளை மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் வரும் இவர் அன்றைய தினம் நல்லை ஆதீனத்துக்கும், ஆயர் இல்லத்துக்கும் செல்லவுள்ளார். மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை நல்லூர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்யவுள்ளதுடன் தமது அமைப்பினால் சுன்னாகம் மற்றும் ஈவினையில் கட்டிக்கொடுக்கப்பட்ட பாலர் பாடசாலைகளையும் பார்வையிடுவார்.

அதனைத் தொடர்ந்து ஊரெழுவில் கட்டிக்கொடுக்கப்பட்ட பாலர் பாடசாலையைத் திறந்து வைப்பார். முற்பகல் 11 மணிக்கு யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ள ஆரியரத்ன பிற்பகல் 2 மணியளவில் புங்குடுதீவு மற்றும் கெருடாவில் பகுதிகளுக்கும் செல்லவுள்ளார்.

மறுநாள் புதன்கிழமை உடுவில் நவசக்தி பாலர் பாடசாலைக்குச் சென்று பார்வையிட்ட பின்பு அவர் கொழும்பு திரும்புவார். (ஒ-10)

# குடிதண்ணீர் விநியோகம்

ஊர்காவற்றுறை,ஜூலை14

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள குடிதண்ணீர் தட்டுப்பாடான பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்வதற்கென சமூக சேவைகள் திணைக்களத்தால் 5 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கமைய ஊர்காவற்றுறையில் பருத்தியடைப்பு, சின்னமடு, புளியங் கூடல், கரம்பொன்கிழக்கு, மெலிஞ்சிமுனை, நாரந்தனை ஆகிய கிராமங்களுக்கும் காரைநகரில் காரைநகர் கிழக்கு, களபூமி, வாரிவளவு, சக்காவோடை கிராமங்களுக்கும் எழுவைதீவு பிரதேசத்திற்கும் இவ்வாறு குடிதண்ணீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் சுமார் ஆயிரத்து 770 குடும்பங்கள் பயன் பெறும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-16)

# காரைநகர் வாரிவளவில் நடந்த திருக்குறள் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்

காரைநகர்,ஜூலை14

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை காரைநகர் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய திருக்குறள் பேச்சுப் போட்டியின் முடிவுகள் வெளியாகி உள்ளன. தரம் ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர் விவரம் வருமாறு:-

தரம் 6 - முதலாம் இடம் கு.பூர்விகா (தியாகராசா ம.ம.வி), இரண்டாம் இடம் செ.சசிகலா (யாழ்ற்ரன் கல்லூரி), மூன்றாம் இடம் வி.பாலேந்திரன் (யாழ்ற்ரன் கல்லூரி).

தரம் 7 - முதலாம் இடம் ந.பிரியதர்சினி (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்), இரண்டாம் இடம் சி.பத்மலோஜினி (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்), மூன்றாம் இடம் செ.கமலவாசினி (யாழ்ற்ரன் கல்லூரி).

தரம் 8 - முதலாம் இடம் த.அனுசியா (தியாகராசா ம.ம.வி.),2ஆம் இடம் பா.பாஸ்கரன் (தியாகராசா ம.ம.வி.), 3ஆம் இடம் இ.சிவசுதர்சினி (தியாகராசா ம.ம.வி.).

தரம் 9 - முதலாம் இடம் சா.சரிதா (தியாகராசா ம.ம.வி.), 2ஆம் இடம் சி.சிவப்பிரியா (தியாகராசா ம.ம.வி.), 3ஆம் இடம் து.ரவிசாந்தி (தியாகராசா ம.ம.வி.).

தரம் 10 - முதலாம் இடம் து.இரவிவதனி (தியாகராசா ம.ம.வி.), 2ஆம் இடம் சித்திரபானு (தியாகராசா ம.ம.வி.), 3ஆம் இடம் தி.பவிதா (தியாகராசா ம.ம.வி.).

தரம் 11 - முதலாம் இடம் த.அஜந்தா (தியாகராசா ம.ம.வி.), 2ஆம இடம் ந.யசோதா (தியாகராசா ம.ம.வி.), 3ஆம இடம் வே.தவராசா (தியாகராசா ம.ம.வி.).

தரம 12 - முதலாம் இடம் சி.கிருஸ்ணவேணி (தியாகராசா ம.ம.வி.), 2ஆம் இடம் சி.அனுசியா (தியாகராசா ம.ம.வி.), 3ஆம் இடம் சு.தவலோசனா (தியாகராசா ம.ம.வி.).

தரம் 13 - முதலாம் இடம் பே.கமலாதேவி (தியாகராசா ம.ம.வி.), 2ஆம் இடம் க.புஸ்பநந்தினி (தியாகராசா ம.ம.வி.), 3ஆம் இடம் வி.சுஹாசினி (யாழ்ற்ரன் கல்லூரி).

மேற்படி மாணவர்களைப் பாராட்டி பரிசளிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் வாரிவளவு நல்லியக்கச் சபை செயலர் சரவணமுத்து பத்மநாதன் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை பிரதம விருந்தினராக கலந்துகொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்குவார். (ஒ-73)

# கட்டாக்காலி நாய்கள் அழிப்பு!

பண்டத்தரிப்பு பிரதான வீதிப் பகுதியிலும் பண்டத்தரிப்பு சந்தைச் சுற்றாடலிலும் திரிந்த கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டன. இவ்வாரம் பண்டத்தரிப்பு பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ்.இராஜதுரை வலி.தென மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு பட்டடின உப அலுவலகத்தினரின் ஒத்துழைப்புடன் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழித்தார். கொல்லப்பட்ட நாய்களின் உடல்கள் புதைக்கப்பட்டன. (ஒ-135)

## மறை ஆசிரியருக்கு!

யாழ்.மறைமாவட்ட மறை ஆசிரியர்களுக்கான கூட்டமொன்று எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு யாழ்.மறைக்கல்வி நடு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து மறை ஆசிரியர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு யாழ் மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்.சி.எக்ஸ்.நேசராஜா கேட்டுள்ளார். (ஒ-8)

## புளொட் அமைப்பின்

# வீரமக்கள் தினம் நேற்றுமுதல் குடாநாட்டில் அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை14

புளொட் அமைப்பின் 13ஆவது வீரமக்கள் தினம் நேற்று ஆரம்பமாகிப் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் அமரர் அ.அமிர்தலிங்கத்தின் நினைவு தினமான ஜூலை 13ஆம் திகதிமுதல் புளொட் அமைப்பின் செயலதிபர் அமரர் க.உமாமகேஸ்வரனின் நினைவு தினமான ஜூலை 16ஆம் திகதிவரையான நான்கு தினங்கள் இந்த வீரமக்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இதனையொட்டி நேற்று முற்பகல் 10:30 மணியளவில் புளொட் உறுப்பினர்களால் யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் செய்யப்பட்டது.

இன்றும் நாளை திங்கட்கிழமையும் யாழ்.போதனா வைத்தியசாலையில் புளொட் உறுப்பினர்களாலும் ஆதரவாளர்களாலும் சிரமதானம் செய்யப்படவுள்ளது. இறுதி நாளான செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.நகரப் பகுதியில் உள்ள புளொட் அலுவலகத்தில் அமரர் உமாமகேஸ்வரனின் உருவப படத்திற்கு உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் மலரஞ்சலி செய்யவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 4 மணிக்கு நினைவுப் பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் பலரும் உரையாற்றவுள்ளதாகப் புளொட் அமைப்பின் உறுப்பினர் செ.இருதயபராஜன் தெரிவித்துள்ளார். (ஒ-10-8)

## நூல் நயம்

# எல்வெட்டி விநாயகர் புகழ் பாடும் வாடாத தோத்திரப் பா மலர்கள்



நூலின் பெயர் :- விநாயகர் தோத்திரப் பா மலர்கள் (பிள்ளையார் புராண வசனச் சுருக்கமுடன்)

நூலாசிரியர் :- ஆ. கதிர்காமத்தம்பி (கவிஞர், முன்னாள் அதிபர், சைவநூற் பதிப்பாளர்)

தனக்குமேல் வேறு ஒரு நாயகனில்லாத ஸ்ரீ விநாயகப் பெருமானின் புகழ்பாடும் சிறந்த ஒரு நூலாக வெளிவந்திருக்கின்றது விநாயகர் தோத்திரப் பா மலர்கள். இதில் விநாயகரின் பெருமை ஒவ்வொரு பாடலிலும் பரிணமிக்கின்றது. அருள் மிகு வேவில் விநாயகப் பெருமானை சிந்தையில் நினைந்து அழகாகப் பாடல்களை இயற்றியுள்ளார் நூலாசிரியர்.

இந்நூலில் போற்றித் திருப்பதிகம், பஞ்சகம், பிரார்த்தனைத், திருப்பதிகம் அற்புதத் திருப்பதிகம், அருட்செயல்கான் திருப்பதிகம், கூட்டுப் பிரார்த்தனை மலர்கள், தோத்திரப் பாக்கள், அர்ச்சனை மலர்கள், அருட்செயல்கள் என்று இன்னோரன்ன விடயங்கள் பலவும் மிக மிகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தப் பாடல்களைப் படிக்கும் போது எங்களையறியாமல் உள்ளம் நெக்குருகிவிடுகிறது. அனைவரும் பார்த்துப் படிக்கக் கூடியதாக அச்சிட்டிருந்தாலும் சில வரிகளின் நெருக்கத்தைக குறைத்திருக்கலாம். ஐதாக இருந்தால் அழகாக இருந்திருக்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாக பிள்ளையார் கதையை யாவரும் எளிதில் படித்து விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் எளிய வசன நடையில் தெளிவாக எழுதியிருப்பது மாணவர்களும் சிறுவர்களும் கதையைப் படித்துப் புரிந்துகொள்ள ஏதுவாக இலகு தமிழில் வரையப்பட்டிருக்கின்றது.

சிவநெறிக் கலாநிதி
**இராசையா ஸ்ரீதரன்**

அழகிய மூவர்ண அட்டையில் பக்திமயமாக விநாயகப் பெருமானின் திருவுருவைத் தாங்கி வெளிவந்திருக்கும் இப்புத்தகம் ஒவ்வொரு சைவ மக்களும் கட்டாயம் படித்துப் பயன் பெற வேண்டிய ஒன்று என்று கூறின் மிகையாகாது.

அததுடன் இந்நூலின் ஒரு சிறப்பமசம் என்னவெனில் விநாயகரைப் பற்றிய பதிகங்கள் எல்லாவற்றையும் வேறு நூல்களிலிருந்து எடுத்துத் தொகுத்து ஒழுங்காகத் தந்திருப்பதே. இப்படி ஒரு நூல் வெளிவந்திருப்பது சைவ மக்கள் செய்த பெரும் பாக்கியம் எனக் கூறின் சாலப்பொருந்தும்.

# சிலுவை சுமப்போம்!

'நீதியுள்ளவராகிய கிறிஸ்து நீதியற்றவர்களுக்காக இறந்தார். எம்மைக் கடவுளிடம் கொண்டு சேர்க்கவே எங்கள் பாவங்களுக்காக ஒரே முறையாக இறந்தார்' என்று புனித பேதுரு கூறுகின்றார். இதற்கு ஒத்தாற் போல் எபிரேயருக்கு எழுதிய திருமுகம் 10:10இல் "இயேசு கிறிஸ்து ஒரே ஒரு முறை நம் உடலை பலியாகச் செலுத்தியதன் மூலம் நாம் தூயவராக்கப்பட்டிருக்கின்றோம்" என்று சொல்கின்றது! 'தம் பலியின் வழியாக நம் அனைவரையும் இறைவன் சந்நிதிதானத்திற்கே அழைத்துச் சென்று இறைவனுடன் இணைத்துவிட்டார்." எபேசியரில் 3:12இல் "கிறிஸ்துவின் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் வழியாக கடவுளை உறுதியான நம்பிக்கையோடு அணுகும் உரிமையும் துணிவும் நமக்கு கிடைத்துள்ளது" நம்மை நீதிமான்களாக்க அவர் பாடுகள் பல பட்டார், அவரது பாடுகள் மரணம் அவருக்கு மகிமையைத் தேடித் தந்தன. "எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். இவ்வாறு பிலிப்பியருக்கு எழுதிய திருமுகம் 2:9-10இல் தூய பவுல் கூறுகின்றார்.

தூய மத்தேயு நற்செய்தியில் யேசு உரைக்கின்றார். "நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது." இவ்வார்த்தையானது கிறிஸ்துவின் தொண்டர்கள் இவ்வுலகில் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாவர் என்பதனைக் குறித்துக் காட்டுகின்றது.

இந்த நிலையில் துன்பத்தை, எதிர்ப்புகளை விலக்கி இன்பமாக, சந்தோஷமாக, மகிழ்ச்சியாக வாழ நாம் விளைகின்றோம். நாம் கொண்டுள்ள இலக்கை அடைய விரும்புகின்றோம் ஆனால் இலக்கை அடைய முயலும்போது வரும் வாழ்வின் சுமைகளைத் தாங்கி எதிர்கொள்ளத் தயங்குகின்றோம் என்றும் சந்தோஷமாக, மகிழ்ச்சியாக இருக்க வாழ்வின் சுமைகள் எம்மை ஆட்கொள்ளாதபடி பார்த்துக் கொள்ள விளைகின்றோம் ஆனால் கிறிஸ்துவின் சீடர்கள், கிறிஸ்துவை பின்பற்றுகின்றவர்கள என்று சொல்ல நாம் தயங்குவதே இல்லை.

## ஞாயிறு நற்சிந்தனை

"எவனாவது என் சீடனாக விரும்பினால் தன் சிலுவையை சுமந்து கொண்டு என்னைப் பின் தொடரட்டும்." இது கிறிஸ்துவின் கட்டளை. வாழ்வின் துன்பங்கள், எதிர்ப்புக்களை சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும என்பதையே இது உணர்த்தி நிற்கின்றது. ஆனால் கிறிஸ்து காட்டிய சிலுவை வழியை, பாதையைப் பின்பற்றத் தயக்கம் காட்டுகின்றோம். கிறிஸ்துவைத் தமது வழிகாட்டியாக கொண்டு வாழ முயற்சி செய்கின்றோமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

பல வேளைகளில் நீதி, உண்மை, அன்பு பற்றி பலவாறாகக் கதைக்கின்றோம். எமது வாழ்வு நீதிக்கு, உண்மைக்கு, அன்புக்கு முற்றிலும் முரணானதாகவே இருக்கின்றது. நீதிக்காக, உண்மைக்காக, அன்புக்காக குரல்கொடுக்கத் தயங்குகின்றோம், ஏனெனில் இவற்றால் வரும் சவால்களை எதிர்கொள்ள தயக்கம் - ஒரு வித பயம் - நீதி, உண்மை, அன்பு, எது என தெரிந்தும் தெரியாதவர்கள் போல் வாழ்கின்றோம் என்ன நடந்தாலும் - எமக்கு என்ன? நாம் வாழ்ந்தால் போதும் என்ற மனநிலையில் இருக்கின்றோம்.

புனித பவுல் இரண்டாவது கொரிந்தியர் 6:7-8இல் எடுத்துரைப்பது போல "உண்மையே பேசி வருகின்றோம். கடவுளின் வல்லமையைப் பெற்றிருக்கின்றோம். நேர்மையே எங்கள் படைக்கலம். அதை வலக்கையிலும், இடக்கையிலும் நாங்கள் தாங்கியுள்ளோம்.' போற்றுவார் போற்றலும் தூற்றுவார் தூற்றலும் எங்களுக்கு ஒரு பொருட்டல்ல, புகழுவார் புகழலும் இகழுவார் இகழலும் எங்களைப் பாதிப்பதில்லை. ஏமாற்றுவோர் என அவர்களுக்குத் தோன்றினாலும் நாங்கள் உண்மையான பணியாளர்கள் என்று நாமும் சொல்லத் தகுதியுடையவர்களா? தனிமனிதனை இறைவனிடமிருந்து பிரிக்கவும் மனித மாண்பினை அழிக்க முயற்சிக்கும் சக்திகளையும் எதிர்த்து போராட நாம் தயாராக வேண்டும். இதனால் நீதி, உண்மை, அன்பு எம்மத்தியில் மலர கிறிஸ்துவை எமது வழிகாட்டியாக கொண்டு வாழ முயற்சிப்போம்.

– அருட்சகோதரர் கான்ஸ்ரோவா

## நவீன சந்தையில் கட்டட இடிப்பு நடவடிக்கை

யாழ்நவீன சந்தைக் கட்டடத்தில் இடிந்து விழும் நிலையில் உள்ள பகுதிகள் இடித்து அப்புறப்படுத்தப்படுகின்றன. கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்த கட்டடப் பகுதிகளே பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி யாழ்.மாநகரசபை ஊழியர்களால் இடித்து வீழ்த்தப்பட்டு வருகின்றன. (ஒ-173)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. வேண்டிய நிறைகளில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

61, இராமநாதன் வீதி,
கலட்டி,
யாழ்ப்பாணம். (5975)

## தொடர்பு கொள்ளவும்

யாழ். மாநகரசபை எல்லைக்குள், அதனை அண்டிய இடங்களில், கொழும்பில் காணிவாங்க விற்க விரும்புவோரும் மற்றும் திருமணம் நிறைவேற்ற விரும்புவோரும் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். உடனுக்குடன் ஆவன செய்யப்படும். மகிழ்ச்சிகரமான பதில்தரப்படும். நேரடியாகவும் தொலைபேசி, கடித மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.

K.பஞ்சலிங்கம்
*25,பிறாங்பேட் பிளேஸ்,*
*பம்பலப்பிட்டி.. கொழும்பு* T.P.074-516289

வே.எ.சிங்கம்
49,2ஆம் ஒழுங்கை, பிறவுண்வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (5963)

## கண்ணீர் அஞ்சலி

எமது தொழில்நுட்ப உதவியாளர்
திரு.சுப்பிரமணியம் சந்திரகுமார் *அவர்களின் அன்புத் தந்தையாராகிய*
**பொன்னம்பலம் சுப்பிரமணியம்**
*(ஓய்வுபெற்ற முகாமையாளர் விற்பனைத் திணைக்களம்)*

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள், ஐசுபி பழரசத் தொழிற்சாலை,
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்.
(5977)

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

## முக்கிய அறிவித்தல்

நாளை 15.07.2002ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகிலிருந்து தென்மராட்சி பிரதேச செயலகம் வரை தென்மராட்சி மக்கள் நலன் சேவைகள சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பேரணிக்கு எமது அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமபடி வேண்டப்படுகின்றீர்கள்.

- சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.
(5968)

## நியூட்டன்

ஆரியகுளம் சந்தி - யாழ்நகர்
A/L - 2004
தமிழ் க.தர்மராஜா
திங்கள், புதன் - 5-6 (S.L.T.)

எழுதுவினைஞர் சேவை போட்டிப் பரீட்சை
பயிற்சி வகுப்பு
By.T - திருமுருகன்
பிரிவு II - 3.30 (S.L.T.)
ஆரம்பம் - 15.07.02 (5966)

வாரம் - 8மணித்தியாலம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

*அ) தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கைநெறி – 2001/2002*
*ஆ) தொழிலாளர் கல்வி டிப்ளோமா கற்கைநெறி – 2001/2002*

(யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கைநெறியில் சித்தியடைந்தவர்கள டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.)

மேற்படி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 2002. 07. 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பரீட்சைகளும் அனுமதிகளும கிளையில பெற்று விண்ணப்பிக்கவும்.

ஏற்கனவே விண்ணப்பித்தோர் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

— பதிவாளர்

12-07-2002 (C/22934)

## விற்பனைக்கு

பொட்டு மார்க் ஓடுகள், செங்கற்கள், வெங்காயம், மரக்கறி பொதி செய்யும் வலைப்பை (நெட்பேக்), றெஜிபோம் மட்டைகள், றெஜிபோம் பெட்டிகள், சகல அளவுகளிலும் தலையணைகள், இறக்குமதி செய்யப்பட்ட பாய்கள், தண்ணீர் டாங்கிகள் 1000 லீற், 500 லீற், 250 லீற், P.V.C எஸ்லோன் பைப் சகல அளவுகளிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

லவநாதன் அன் பிறதர்ஸ
112 A, காங்கேசன்துறை வீதி,
(யாழ்.ப.நோ.கூ.சங்கத்திற்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
(5973)

## தொடர்பு கொள்ளவும்

**திருமதி விக்கிரமராஜன் சிவசாளினி** என்பவர் 09.07.2002 அன்று யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்ற பின் இன்னமும் வீடு திரும்பவில்லை. இவர் சிவந்த நிறம், 51/2 அடி உயரம். அன்று பட்டர்கலர் செக் பாவாடையும் மருண் கலர் பிளவுஸும் அத்துடன் தங்க நகைகளும் அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் அல்லது தகவல் அறிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

சின்னத்தம்பி சிவபுண்ணியம் *(தகப்பன்)*
கைதடி, தெற்கு, கைதடி.
(5974)

“பகலோன் களஞ்சியத்தால்”
ஆரம்பிக்கப்படவுள்ள “இரத்னா ரவல்ஸ்”

## பயணிகள் பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கான பயணிகள் பஸ சேவை ஒவ்வொரு திங்கட்கிழமையும் அதிகாலை பகலோன் களஞ்சியத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

தரிப்பிடங்கள்: பெட்டா, வெள்ளவத்தை.

*ஆசனப்பதிவுகளுக்கு:-*

“பகலோன் களஞ்சியம்”
334, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ. இல. 2316
(5974)

# VACANCIES IN 'FOOD CITY'

யாழ்.நகரில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள **பல்பொருள் அங்காடிக்கு** பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. *(ஆண், பெண் இருபாலாரும்)*

- மேற்பார்வையாளர்கள் (Supervisors)
- விற்பனை முகாமையாளர்கள் (Sales Managers)
- கணக்காளர் (Accountant)
- விற்பனையாளர்கள்: (Sales Men) ✱ Groceries ✱ Pharmacy ✱ Fancy Goods ✱ Stationeries ✱ Jewelery ✱ Ceramics ✱ etc.
- கணனி இயக்குநர்கள் (Computer Operators)
- களஞ்சியப் பொறுப்பாளர் (Store Keepers)
- பொதி செய்வோர் (Packers)
- மின்சார தொழில்நுட்பவியலாளர் (Electricians)
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (Security Officers) இருபாலாரும்
- தொலைபேசி இயக்குநர் (Telephone Operator)
- விநியோகப் பையன்கள் (Delivery Boys)
- சிற்றூழியர்கள் (Labourers)

தகுதியானவர்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு, சுயவிவரங்கள், நிரந்தர/தற்காலிக முகவரி, தே.அ.அட்டை இலக்கம், கல்வித் தகைமை, தொழிலனுபவம் (பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) அடங்கியதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

**Administrative Manager,**
**ANNAI NAGAA FOOD CITY,**
**175 (43), K.K.S. Road, Jaffna.**

என்னும் முகவரிக்கு 31-07-2002 இற்கு முன்னர் ச டைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

(5969)

# சமாதான முயற்சிகள் தோல்வியுறாமல் தடுப்பது சமூகத்தின் பெரும் பொறுப்பு

**தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்து பல்வேறு அச்சங்கள், சந்தேகங்கள் நிலவுகின்றன. இருப்பினும் இவற்றை எல்லாம் எவ்வாறு ஓரங்கட்டி சமாதானத்தை எட்டலாம் என்பது குறித்து பிரபல பத்திரிகையாளர் விக்டர் ஐவன் 'சிலுமின' வார இதழுக்கு அளித்த பேட்டியில் விளக்குகிறார். அந்தப் பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

*கேள்வி:* யுத்தத்திற்கு மாற்றீடாக தற்போது நடைமுறையிலுள்ள புரிந்துணர்வு உடன்பாடு உருவாக்கப்பட்ட பின்னணிகளை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?

*பதில்:* நீண்ட வரலாற்றைக் கொண்ட- இழுபட்டுக் கொண்டிருந்த - யுத்தத்திற்கு இரு தரப்பினரும் முன்னுரிமை அளித்துவந்த போதிலும் பல்வேறு காரணங்களால் இரு தரப்பினரும் யுத்தத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாத சிக்கலில் அகப்பட்டுள்ளனர்.

மீண்டும் யுத்தத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை உருவானாலும் அதை மேற்கொள்ளமுடியாத நிலைககு இரு தரப்பினரும் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறான பின்னணியில் இரு தரப்பினரும் ஏதாவது உடன்பாட்டிற்குச் செல்ல வேண்டி இருந்ததே தவிர இது யுத்தம் காரணமாக உருவான அனுதாபத்தாலோ அல்லது யுத்தத்தினால் ஏற்பட்ட தீமைகளைப் புரிநது கொண்டதாலோ அல்ல.

*கேள்வி:* இதன் வெற்றி தோல்வி குறித்து தங்கள் கருத்து என்ன?

*பதில்:* தேசிய மற்றும் சர்வதேச அளவில் உருவாகும் அழுத்தங்கள் மற்றும் போரில் சிக்கியதால் உருவான பிரதிபலன்களைத் தவிர இரு தரப்பினருக்கும் இடையில் உருவான பாசம், பட்சாத்தாபம் அல்லது புரிந்துணர்வு ஆகியவற்றால் யுத்தநிறுதத உடன்பாடோ அல்லது புரிந்துணர்வு உடன்பாடோ உருவாககப்படவில்லை. இதுவே இவ்விடயத்திலுள்ள பலவீனமான விடயமாகும்.

## விக்டர் ஐவன் பேட்டி

எனவேதான் இருதரப்பினரும் சில வரையறைகளை எதிர்நோக்க நேர்ந்துள்ளது. சர்வதேச சமூகத்தினரைத் திருப்திப்படுத்துவதற்கு, உடன்பாட்டின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு மேலதிகமாக வேறெதையும் செய்ய முடியும் எனத் தெரியவில்லை. அதில் எந்தக் கருததும் கூறப்படவுமில்லை. இந்த நடவடிக்கைகளில் சாதகமான அறிகுறிகள் இல்லை எனக் கூறப்படுவதற்கு இவையே காரணமாகும்.

ஆழமான புரிந்துணர்வுடன் பிரச்சினைக்குத் தீர்வுதேட முயல்வதை விட தம்மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்களின் பிரதிபலனாக - அந்த அழுத்தங்களைப் பிரயோகிப்பவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகச் செயற்பட நேரிடுவது இந்த உடன்பாட்டிலுள்ள பலவீனமாகும்.

**மூன்றாம் தரப்பின் அனுசரணை**

மூன்றாம் தரப்பினரின் அனுசரணையை நான் இவ்விடயத்தில் சாதகமான ஒன்றாகக் கருதுகிறேன். இதனால் ஒருதரப்பினருக்கு எதிராக மறுதரப்பினர் செயற்படும் விதத்திற்குப் பதிலாக, குறைபாடுகளை விமர்சித்து அவற்றை நேர்சீர் செய்வதற்கு அழுத்தங்களை வழங்கும் நிலைமை தற்போது உருவாகியுள்ளது. இதனால் இருதரப்பினரும் எப்போதும் இல்லாத விதத்தில் தற்போது நேர்மையுடன் செயற்படும் நிலைமை உருவாகியுள்ளது.

நிபந்தனைகள் நிறைவேற்றப்படவில்லை என குற்றச்சாட்டுக்கள் சுமததப்பட்டாலும் அதைக் காரணமாகக் கொண்டு பேச்சுகளுக்கு போக மறுக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இரு தரப்பினருக்கும் இடையில் பெருமளவில் சந்தேகங்கள் நிலவுவது போலவே முன் ஒருபோதுமில்லாத வகையில் கடும் நம்பிக்கையும் உருவாகியிருப்பது முக்கியமான விடயமாகும்.

இவையெல்லாம் முன் ஒருபோதுமில்லாத மாற்றங்களாகும். இக்காரணங்களினால் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டினாலும் எவ்வகையிலேனும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடிகிறது. இவ்விதமாக இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கப்படும் முயற்சிகள் சாதகமான விடயங்களாகும்.

*கேள்வி:* மேற்கொள்ளப்படும் தீர்வினை சமூகங்களிடையே நடைமுறைப்படுத்தும் வாய்ப்புக்கள் குறித்து தங்கள் மதிப்பீடு என்ன?

*பதில்:* பிரச்சினையின் உண்மையான நிலைமையை உணர்ந்து அதற்கு மேற்கொள்ளக்கூடிய தீர்வு குறித்து புரிந்து, பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான திட்டம் ஏதுமில்லாமல் இருப்பது சமாதான முயற்சிகளில் உள்ள முக்கிய குறைபாடாகும். அதே போலவே இவ்வாறான முயற்சிக்கு தேவையான சமூக ஒப்புதலை இரு தரப்பினராலும் உருவாக்க முடியவில்லை.

இந்த இரு சமூகத்தினரும் சுவாகளால் பிரிக்கப்பட்ட வெவ்வேறு உலகங்களில் (பகுதிகளில்) வாழ்கின்றனர். இந்தப் பிரச்சினையின் உண்மையான நிலைமை, அதன் பாரதூரம் மற்றும் இந்தப் பிரச்சினையால் எட்டப்படகூடிய நன்மைகள் ஆகியன தொடர்பான அறிவு இந்த இரு சமூகத்தினருக்கும் கிடைக்கவில்லை. சம பவங்களில் இருந்து ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறதே தவிர மக்களுக்கு தெளிவான விளக்கங்கள் அளிக்கப்படவில்லை. இது இருதரப்பினராலும் காணப்பட்ட இணக்கப்பாட்டுக்கு வலுவூட்ட முடியாத நிலைமை சமூகங்களிடையே உருவாக காரணமாக அமைந்துள்ளது.

*கேள்வி:* சமாதானத்திற்கான இந்தப் பயணம் நம்பிக்கையற்றது - ஆபத்தானது எனக் கூறப்படும் கருத்துக் குறித்து உங்கள் எண்ணம் என்ன?

*பதில்:* வரலாற்றை மீண்டும் மீண்டும் எடுத்துரைத்து இந்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தால் மீண்டும் ரத்த ஆறு ஓட வாய்ப்பு உள்ளது என பொதுமக்களிடையே ஒரு பீதியை உருவாக்கலாம். இந்த முயற்சியின்போது இரு தரப்பினரும் ஒரு தீர்வுக்கு வராவிடின் ஏற்படக்கூடிய அழிவுகள் மிகவும் பயங்கரமானவை என்பதில் சந்தேகமில்லை.


எனவேதான் ஏற்படக்கூடிய தோல்விகளைத் தவிர்ப்பதற்கு சமாதான முயற்சிகளை வலுவானவையாக்க வேண்டும். இந்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்து அதனால் ஏற்படும் அழிவுகளைத் தடுப்பதே சமூகங்களின் பொறுப்பாகும்.

*கேள்வி:* இந்தப் பிரச்சினைக்குத் தீர்வினைத் தேடும் விடயத்தில் சர்வதேச அழுத்தங்கள் அளவுக்கு அதிகமாக உள்ளன எனக் கூறப்படுகிறதே?

*பதில்:* தேவையற்ற விதத்தில் சர்வதேச அழுத்தங்கள் உள்ளன என்ற கருத்தில் சில உண்மைகள் உள்ளன. இருப்பினும் உலகில் எந்தவொரு பிரச்சினையும் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பின்றித் தீர்க்கப்பட்டதற்கான சான்றுங்கள் இல்லை. தென் ஆபிரிக்கா தனது பிரச்சினைக்குத் தீர்வினைத் தேடியபோது "நாங்கள் முழுந்தளவு உலகின் உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் பெறுவோம். இருப்பினும் எமது பிரச்சினைக்கு எட்டப்படும் தீர்வில் சர்வதேச சமூகம் கைபோட முடியாது" என்ற குறிக்கோளுடனேயே செயற்பட்டனர். ஆனால், அயர்லாந்தின் நிலைமை இதற்கு முற்றிலும் மாறுபட்டது. அவர்கள் தங்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாண வெளிநாட்டுத் தலையீடுகளைப் பயன்படுத்தினர். வெளிநாட்டின் அனுசரணையின்றி உள்நாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமாயின் அது மிகவும் பொருத்தமானதாகும். ஆனால், துரதிஷ்டவசமாக எமது நாட்டுப் பிரச்சினைக்கு வெளிநாட்டு அனுசரணை இன்றியமையாத ஒன்றாகி விட்டது. எங்களது தவறுகள் காரணமாகவே இவ்வாறான நிலைமை உருவானது.

*கேளவி:* வெளிநாட்டு அனுசரணையில் உள்ள ஆபத்துக்கள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

*பதில்:* வெளிநாட்டு அனுசரணையில் உள்ள பயங்கரமான நிலைமை என்னவெனில், அவர்கள் என்ன நோக்கத்தைக் கொண்டுள்ளார்கள் என்பது ஒரே தடவையில் வெளியே தெரியாமல் இருப்பதாகும். சில வேளைகளில் வெளிநாட்டு அனுசரணை நேர்மையான ஒன்றாக இருக்கவும் கூடும். சிலவேளைகள் எதையோ எதிர்பார்த்து மேற்கொள்ளும்



அனுசரணையாகவும் இருக்ககூடும. இருப்பினும் வெளிநாட்டு அனுசரணை எத்தகைய ஆபத்துக்கள் நிறைந்ததாயினும் நாம் அதை நிராகரிக்க முடியாத நிலையிலேயே உள்ளோம். இதற்குக் காரணம் எந்தவொரு வெளிநாட்டு அனுசரணையும் இன்றிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாத நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

*கேள்வி:* இவ்வாறான நிலைமையில் எமது நாட்டுத் தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண அனுசரிக்க வேண்டிய முறையைத் தெளிவுபடுத்த முடியுமா?

*பதில்:* அரசுக்கு எதிராக கிளர்ச்சிகளை மேற்கொள்ள சமூகத்தில் ஒரு தரப்பினர் முயலும் நிலை உருவாகியுள்ளது. இதற்குக் காரணம் மதம், தேசியமொழி அல்லது கலாசாரம் ஆகியவற்றில் ஏதாவது ஒரு காரணத்திற்காக அல்லது ஒன்றிணைந்த காரணங்களின் அழுத்தங்களாக இருக்கலாம்.

இருப்பினும் இவ்வாறு கிளர்ச்சி உருவாகக்கூடிய நிலைமையானது அரசு பிரச்சினையை எதிர்நோக்குவதையே தெளிவாக்குகிறது. இது சமூகத்தால் ஏற்றுக்கொள்ளமுடியாத கிளர்ச்சி என்பது உறுதி. எனவேதான அவ்வாறான கிளர்ச்சியின் தலைமையும் வன்முறையைக் கொண்டதாகும. இவ்வாறான அரச விரோதக் கிளர்ச்சிகளை ஒடுக்க நடவடிக்கை மேற்கொள்ளும் அரச தலைமைத்துவமும வன்முறைகளையே அனுசரிக்கிறது.

தமது அதிகாரத்துக்கு அச்சுறுத்தலாக - தங்களை எதிர்ப்பவர்களை ஒடுக்க கொடிய, மிலேச்சத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதே இதறகுக காரணமாகும். கிளர்சியைப் பிரபாகரன் மேற்கொண்டாலும் அல்லது விஜேவீரா மேற்கொண்டாலும் அதன் சுபாவம் வன்முறையைக் கொண்டதாகவே இருக்கும் இருப்பினும் அரசின் செயற்பாடுகளுக்குக் குறுக்கே இவ்வாறான கிளர்ச்சிகள் உருவாகும் போது அவை ஒடுக்கப்படவேண்டும்.

இல்லையேல் அரசு அனுசரிக்கும் கொள்கையைக் கிளர்ச்சியில் ஈடுபடுவோர் ஏற்றுக்கொள்ளும் நிலைமையை உருவாக்க வேண்டும். தமிழ் மக்களின் கிளர்ச்சியை ஒடுக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எவையும் இதுவரை வெற்றியளிக்காததைப் போலவே கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களுக்கும் வெற்றி கிட்டவில்லை. எனவேதான் தற்போது தேவைப்படுவது அரசு அவர்களை அழைத்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிப்பதாகும். வனவாசம் மேற்கொள்ளும் அவர்களையும் நிர்வாகத்தில் பங்காளிகளாக்குவது அரசுக்கும் சமூகத்திற்கும் நல்லதாகும். அவர்கள் (விடுதலைப் புலிகள்) நிர்வாகத்தில் பங்காளிகளாக ஆனபின்னர் யுத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் மனதில் உள்ள உணர்வுகளிலும், அவர்களை அழிக்க வேண்டும் என அரசுக்குள்ள ஆர்வத்திலும் மாற்றங்கள் உருவாகும்.

**ஆயுதக் கலாசாரம்**

*கேள்வி:* சமாதான முயற்சிகள் குறித்து அவநம்பிக்கையுடையவர்களும் இருக்கிறார்களே?

*பதில்:* துரதிஷ்டவசமாக ஒரு சிலர் பிரபாகரன் நிர்வாகத்தில் பங்காளியாக வருவதை விரும்பவில்லை. அவர் காட்டில் வாழவேண்டும் என்பதே அவர்களது விருப்பமாகும். பிரபாகரன் காட்டில் இருந்து வெளியே வந்து பணிமனை ஒன்றைத் திறந்தவுடன் அங்கே பாருங்கள்! விடுதலைப் புலிகள் பணிமனை திறக்கிறார்கள் என நாங்கள் கூறுகின்றோம். பணிமனை ஒன்றைத் திறப்பதா? அல்லது முகாம் ஒன்றைத் திறப்பதா நல்ல விடயம்.

*கேள்வி:* விடுதலைப் புலிகள் அமைப்பில் உயர்மட்டத்தில் உள்ளவர்கள் சமாதானத்திற்குத் தயாராயில்லை எனக் கூறப்படுகிறதே?

*பதில்:* அரசுக்கு எதிராகச் செயற்பட்ட எந்தவொரு அமைப்பும் ஜனநாயக நீரோட்டத்தில் சேர்வது எனத் தீர்மானித்த உடனேயே தனது குண இயல்புகளைத் திடீரெனக் கைவிடாது. ஜே.வி.பியும் அவ்வாறே நடந்துள்ளது. அரசவிரோத கிளர்ச்சியாளர்கள் திடீரென தங்கள் சுருதியை மாற்றிக்கொள்வதில்லை. அதற்கு ஓரளவு காலம் எடுக்கும். துப்பாக்கிக்குப் பதிலாக கொடிகளைத் தூக்கும் நிலை உருவாகும்போது சுருதி மாற்றத்திற்கான அறிகுறி தெரியவரும். மீண்டும துப்பாக்கிகளை ஏந்தும் நிலைமை உருவாகாமல் தடுப்பதற்கான முயற்சிகளிலேயே நாம் ஈடுபடவேண்டும்.

*கேள்வி:* சமூகப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலும்போது சமூகங்களுக்கு அதற்கேற்ப அறிவு புகட்டப் படவேண்டும் என்பது எவ்வாறு அமையவேண்டும்?

*பதில்:* எழுத்தைப் படிப்பதை மாத்திரம் அறிவு எனக் கூறமுடியாது. எமது கல்வித் தரம் மிகவும் உயர்ந்தது என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஆனால் பரந்த அறிவைப் பொறுத்தவரையில் நவீன உலகில் நாம் கீழ் மட்டத்திலேயே உள்ளோம்.

எழுத்தறிவுபடிப்பில் எங்களைவிட மிகவும் கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் கூட பரந்த அறிவைப் பொறுத்தவரையில் மிகவும் உயர்ந்த இடத்தில் இருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளவில்லை. பல்வேறு சமூகங்களிடையேயான வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைந்து வாழும் விதத்தை நாம் இன்றும் கற்றுக் கொள்ளவில்லை. நாங்கள் தற்பெருமையுடன் கூடிய கற்பனை உலகில் வாழ்கின்றோம். எம்மிடமுள்ள தற்பெருமை தான் நாம் இன்றுள்ள நிலைமைக்குக் காரணமாகும்.

தென் ஆபிரிக்காவில் சமாதானத் திட்டத்தைத் தயாரித்தவர்கள் முதலில் மேற்கொண்ட நடவடிக்கை மக்களுக்கு மீண்டும் கல்வியைப் புகட்டியதேயாகும். அக்கல்வி மூலம் வெள்ளை இனத்தவர்களும் கறுப்பு இனத்தவர்களும் எவ்வாறு ஒன்றிணைந்து வாழ்வது, உண்பது, குடிப்பது போன்றவை சமூகத்திற்குப் புகட்டப்பட்டன. உயர்நீதிமன்ற நீதியரசர்கள் தொடக்கம் சாதாரண சிப்பாய்கள் வரை அக்கல்வி புகட்டப்பட்டது. அதன்மூலம் அம்மக்கள் ஒன்றிணைந்து வாழ்வது தொடர்பான அறிவைப் பெற்றனர். அது அதிகாரத்தால் சுமத்தப்பட்ட கல்வி அல்ல. தேவைக்கேற்ப சமுதாயத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

*கேள்வி:* எமது சமூகத்தை அந்த அடிப்படையில் உருவாக்குவதிலுள்ள தடைகளை விவரிக்க முடியுமா?

*பதில்:* பல்வேறு நடவடிக்கைகள், முயற்சிகளின் பின்னரே சாதாரண சமூகத்தின் அமைப்பு மானிய முறைச் சமுதாய அமைப்பிலிருந்து ஜனநாயக முறைச் சமுதாய அமைப்பாக மாறியது. அந்த நீண்ட பயணத்தின் பிரதிபலனாகவே புதிய தேசிய அரசுகள் உருவாகின. மானிய முறைச் சமுதாய அமைப்பை ஜனநாயகமுறைச சமுதாய அமைப்பாக மாற்றுவதில் பல்வேறு தடைகள் இருந்தன. இனம், குலம், மதம் ஆகியனவற்றை ஒற்றுமையாக்கி ஒன்றுடன் ஒன்று இணைக்கும் செயற்பாடாக அது அமைந்தது. ஆனால், நாங்கள் அந்த நிலையை அடையவில்லை.

*கேள்வி:* தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஊடகங்களின் முக்கியத்துவத்தை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்.

*பதில்:* நாட்டின் சுதந்திரத்திற்காக மேற்கொள்ளப்பட்ட அரசியல் நடவடிக்கைகள் காரணமாகவோ அல்லது வேறு சமூகப் போராட்டங்களின் அடிப படையிலேயோ எமது நாட்டில் ஊடகங்கள் உருவாகவில்லை. இருப்பினும எங்களுடன் ஒப்பிடுகையில் இந்தியா போன்ற நாடுகளில் சுதந்திரத்திற்காக மேற்கொள்ளப்பட்ட சமூகப் போராட்டங்களை அடிப்படையாகக் கொண்டே விசேடமாக ஊடகங்கள் உருவாகியுள்ளன. எனவேதான் அவர்களுக்கு சமூகத்தைப் பற்றிய போதிய அறிவு மற்றும் சமூகத்திற்கு அறிவைப் புகட்ட வேண்டிய விதம் ஆகியன தொடர்பாக புரிந்துணர்வும் பொறுப்புகளும் இருந்தன.

அவ்வாறானவற்றை எமது ஊடகங்களிலோ ஊடகங்களை நடத்துபவர்களிடமோ காணமுடிவதில்லை. எனவேதான் எமது ஊடகங்கள் மானிய முறை அமைப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு தங்களது இனம், மதம், குலம் ஆகியனவற்றின் பேரில நடத்துவதே தங்கள் கடமை எனக் கருதுகின்றனர். சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு ஊடகங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, சமூகப் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கும் நடவடிக்கைகளிலேயே ஊடகங்கள் ஈடுபட்டன. இதனால் ஊடகங்கள் ஊடாக "சம தேசிய" சமுதாயத்தை உருவாக்க முடியவில்லை. ஊடகங்கள் அரசுக்கு எதிரான கிளர்ச்சிகள், கலவரங்கள் மற்றும் சமூகப் பிரச்சினைகளைச் சிகக லாக்குதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனவேயன்றி அவற்றிற்குத் தீர்வு காணும் முயற்சிகளில் ஈடுபட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டன.

**தமிழில்: கஜனி**

*கேள்வி:* நீண்ட காலப் பிரச்சினை உருவாகியதற்கு சமூகத்தின் பங்களிப்புக் குறித்து தங்கள் கருத்து என்ன?

*பதில்:* சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என பிரிந்துள்ள எமது சமுதாயத்தில் ஒருவர் மீது ஒருவர் சேறுபூசும் நடவடிக்கைகளே இடம் பெறுகின்றன. சமுதாய வெற்றிகளைப் பெறுவதற்குப் பதிலாக அனைத்தையும பரிசாக (இலவசமாக) பெற்ற சமுதாயத திற்கு இவ்வாறன தலைவிதி உருவானது புதுமையான விடயமல்ல. கடமைகளை நிறைவேற்றி உரிமைகளை வென்றெடுத்து - பெற்ற உரிமைகளைப் பாதுகாத்து அன்னியோன்யமாக வாழும் சமூகமல்லவே எமது சமூகம். சமூகத்திலுள்ள அனைத்து மத நிறுவனங்கள் மற்றும் நிர்வாக பீடங்களில் ஊழல் நிலவுகிறது. இவ்வாறான ஊழல்கள் நிலவும் நிறுவனங்கள் மீது கற்களை வீசும் நிலைக்கு இந்நாட்டு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். சமாதானம் பற்றிப் பேசினால் வெளிநாட்டிலிருந்து நிதி கிடைக்கிறது எனக் குற்றஞ்சாட்டுகின்றனர். யுத்தம குறித்துப் பேசினால் ஆயுத வியாபாரத்துடன் தொடர்புகள் இருக்கிறது எனக் குற்றஞ்சாட்டுகின்றனர். இவற்றில் இருந்து எமது சமூகத்தின் நிலைமையை இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும்.

*கேள்வி:* விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தின்மூலம் கிடைக்கும் அதிகாரம் அப்பிரதேசத்திலுள்ள ஏனைய அமைப்புகளின் செயற்பாடுகளுக்கு பாதிப்பாக அமையும் எனக் கூறப்படுகிறதே. அதுபற்றித் தங்கள் கருத்து என்ன?

*பதில்:* அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரதான நீரோட

(14 பக்கம் பார்க்க)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜுலை14.

நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலய சிவன் மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா இன்று காலை 7 மணிக்கும் தீர்த்தோற்சவம் நாளை காலை 7மணிக்கும் இடம்பெறும்.(எ)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜுலை14

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30மணிக்கு இடம பெறுகிறது. நாளை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும்.

(ஒ-139)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜுலை14

ஏழாலை, சூராவத்தை ஸ்ரீ முத்து மாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள்புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(ஒ-10)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜுலை14

கோண்டாவில் வடக்கு அன்னங்கை சிவபூதராஜர் ஆலய தேர்த்திருவிழா இன்று காலை 8மணிக்கு நடைபெறவுள்ளது.

மதியம் அன்னதானம் வழங்கப்படும்.

☆ ☆ ☆

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் மஹோற்சவம் இன்று ஞாயிற் றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 23ஆம் திகதி தேர்உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (ஒ-117)

☆ ☆ ☆

கொக்குவில் சாயி துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஒ-10)

☆ ☆ ☆

குருநகர் கார்மேல் அன்னை ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 5.30மணிக்கு நற்கருணை விழா வழிபாடும் மறுநாள் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30மணிக்கு திருவிழாத் திருப்பலியும் நடைபெறும். திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் அன்னையின் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும். (ஒ-51)

☆ ☆ ☆

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை பகல் 12மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஒ-10)

☆ ☆ ☆

பருத்தித்துறை புலோலி மத்தி, அவ்வொல்லைப் பிள்ளையார் கோவில், காத்தவராயர் சுவாமியின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகிறது.

(ஒ-15)


## விழியின் மீது விழிப்பாயிருங்கள்

நம் தலையில் இருக்கும் உறுப்புகளில் மூளைக்கு அடுத்ததாக அதி முக்கியத்துவம் வாய்ந்த கண்ணைப் பற்றி நாம் அலட்சியமாக இருந்து விடக்கூடாது.

- உங்கள் பிள்ளைகள் படிப்பில் ஆர்வம் காட்டாமல் பின் தங்கிய நிலையில் உள்ளனரா?
- 40 வயதை அடைந்தவர்கள் சிறிய எழுத்துக்கள் எழுதப் படிக்க சிரமப்படுகிறீர்களா?
- 15 வயது முதல் 24 வயது வரையிலான இளைஞர், யுவதிகள் ஒரு விதமான தலைவலியால் அவதிப்படுகிறீர்களா?

அப்படியாயின் நிச்சயமாகக் கண் குறைபாடுதான் காரணம்!

எம்மிடம் வாருங்கள்! இலவச கண் பரிசோதனைகளும், ஆலோசனைகளும் வழங்கப்படும். அத்துடன்

- முகப் பொலிவுக்கேற்ப சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும்
- மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக்கொள்ளவும்.

இன்றே நாடுங்கள்

### எரிக்கனேஸ்

மூக்குக் கண்ணாடி அகமும் பல்கட்டும் இடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 2486

*80, K.K.S. வீதி, சுன்னாகம்.*
(C/22937)
*91, K.K.S. வீதி, கொக்குவில்.*



உ

## தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயில்
## 2002 - சித்திரபானு
## வருஷ மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | | |
|---|---|---|
| 15.07.2002 திங்கள் | கொடியேற்றம் | முற்பகல் 11.00 மணி |
| 20.07.2002 சனி | தைலாப்பியங்க அபிஷேகம் | காலை 8.00 மணி |
| 22.07.2002 திங்கள் | வேட்டைத் திருவிழா | பிற்பகல் 1.00 மணி |
| | சப்பரம் திருவீதி பவனி | மாலை 7.30மணி |
| 23.07.2002 செவ்வாய் | தேர்த்திருவிழா | காலை 9.00மணி |
| | சண்முகார்ச்சனை | நண்பகல் 12.00மணி |
| 24.07.2002 புதன் | தீர்த்தவாரி | காலை 9.00மணி |
| | கொடியிறக்கம் | மாலை 6.00மணி |
| 25.07.2002 வியாழன் | திருக்கலியாணம் | மாலை 4.00மணி |
| 26.07.2002 வெள்ளி | வைரவர் பொங்கல் | மாலை 3.00மணி |

"வேலுண்டு வினை தீர்க்க
மயிலுண்டு எமைக் காக்க"

அடியார்கள் வருக! அருள் பெறுக!!

*தாவடி, கொக்குவில்.* (5684)

திருமுருகன் அருள்வழி நடக்கும்
*பரிபாலன சபையினரும்*
*உபயகாரர்களும்.*


## அங்கவீனருக்கு பயிற்சித் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜுலை14

நாடளாவிய ரீதியில் 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட வயதை உடைய அங்கவீனர்களுக்கான பயிற்சித்திட்டமொன்றினை அரசு செயற்படுத்த உள்ளது.

இத்திட்டத்தில் பயிற்சி பெறும் அங்கவீனர்கள் தனியார்துறைகளில் பணியாற்ற அல்லது சுயதொழில் தொடங்கக் கூடியதாகவோ இருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

பயிற்சியின் முடிவில் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான தொழில்சார் உபகரணங்களும் வழங்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-12)

## மயானத்துக்கு அனுமதிக்குமாறு மக்கள் கோரிக்கை!

தென்மராட்சி,ஜுலை14

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானம் பொதுமக்களின் பாவனைக்கு அனுமதிக்கப்படாததால் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் இந்த மயானத்தைப் பயன்படுத்த முடியாது நுணாவில் கொல்லங்கிராய் மயானம், மீசாலை, அல்லாரை பொற்புலவு மயானம் ஆகியவற்றுக்கு சடலங்களைத் தகனக்கிரியைகளுக்காக கொண்டு செல்லவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1999 டிசம்பர் மாதம் தொடக்கம் இந்த மயானத்தில் படையினர் நிலைகொண்டுள்ளதால் பொது மக்கள் பாவனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-117)


கட்டடப் படவரைஞர்
### தேவை

தொழில் நுட்பக் கல்லூரியில் பயிற்சி முடித்தவர்கள்/சித்தி பெற்றவர்கள் யாழ்.நகருக்கு அண்மையில வசிப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு:
விளம்பர இல. 1669,
C/0 உதயன், யாழ்ப்பாணம்.
(5978)



### விலை வீழ்ச்சி

உரும்பிராய், காரைக்கால், மாசியப்பிட்டி ஆகிய இடங்களிலுள்ள 3 மாட்டிறைச்சிக் கடைகளில் 1Kg இறைச்சி 140/= ஆக விற்பனையாகி தற்போது 1Kg - 120/= ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*உரிமையாளர்:-*
இ.இராஜகுமார்,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
(5981)


## குருநகர் மக்கள் சிரமம்

குருநகர்,ஜுலை14

குருநகர் தண்ணீர் தாங்கி அமைந்துள்ள இடம் இரவில் இருள் சூழ்ந்த பகுதியாகக் காணப்படுவதால் இவ்வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் மிகுந்த சிரமத்தை அநுபவித்து வருவதாகக் கூறப்படுகிறது.

குருநகர் தண்ணீர் தாங்கிக்கு முன்பாக மத்திய கிழக்கு வீதியும் அருகில் தண்ணீர் தாங்கி வீதியும் அமைந்துள்ளன. இவ்விடம் முச்சந்தியாக உள்ளதாலும், மிகவும் ஒடுங்கிய வீதியாக உள்ளதாலும், இவ் வீதியின் அருகில் மின்சார சபையினரால் மின்குமிழ் அமைக்கப்பட்டால், மின்வெளிச்சம் மூலம் இவ் வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் மிகுந்த சிரமமின்றிப் போக்குவரத்துச் செய்ய முடியும் எனப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

குருநகரில் உள்ள ஏனைய முக்கியமான வீதிச் சந்திகளில் மின் ஒளி வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ள மின்சார சபையினர் இவ்விடத்தில் மட்டும் இவ்வசதியைச் செய்யவில்லை எனக்கூறப்பட்டது. (எ-51)

## சமாதான முயற்சிகள்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

டத்திற்கு வந்த உடனேயே தாங்கள அதுவரை அனுசரித்துவந்த உரிமைகளை ஒரேயடியாகக் கைவிடமாட்டார்கள். தமது எதிரிகளை அழித்தும் தமது நிலையை உறுதிப்படுத்தியும் உருவாக்கப்படும் அதிகாரமானது அரசுக்கு எதிராக போராட்டங்களை மேற்கொள்ளும் சக்திகளின் இயல்பான இயல்பாகும். இவர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தவர்களுக்கும் இடையே பிரச்சினைகள் இருப்பதும் இயல்பு. ஆனால், இவை எல்லாவற்றையும் போராட்டங்கள் இடம்பெற்ற காலகட்டங்களில் மாத்திரம் அனுமதிக்க முடியும். ஆனால், போராட்டங்களை மேற்கொண்டவர்கள் பிரதான நீரோட்டத்தில் கலந்த பின்னர் தங்கள் பிரதிவாதிகளுடன் ஜனநாயக வரையறைகளுக்குள்ளேயே தொடர்புகளைக்கொள்ள வேண்டும். முதலில் அவர்கள் இந்த நிலைமைக்கு வந்ததற்குக் காரணமான யுத்தம் நிறுத்தப்பட்டு நிர்வாகத்தில் அவர்களை இணைக்க வேண்டும். இவற்றின்படி பிரபாகரனை இந்த நிலையில் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமா? இல்லையா? என்பதை சிங்களச் சமூகம தீர்மானிக்க முடியாது. பதிலாக இதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ்மக்களாகும். எனவேதான், வரலாற்றின் அடிப்படையில் எதிர்காலத்தால் தீர்மானிக்கப்படும் என நான் நினைக்கின்றேன்.

*கேள்வி:* இடைக்கால நிர்வாகத்தை வழங்குவது ஈழத்தை வழங்குவதன் முதற்படி என ஒரு சிலர் கூறுகிறார்களே?

*பதில்:* விவாகரத்துத் தொடர்பான சட்டம் உருவாக்கப்பட்ட வேளையில் சமூகத்தில் பெருமெடுப்பில் கோஷங்கள் எழுப்பப்பட்டன. விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன. சமுதாயத்திலுள்ள குடும்பக் கூட்டுறவை விவாகரத்துச் சட்டம் நிர்மூலமாக்கிவிடும் எனக் கூறப்பட்டது.

இந்தச் சட்டம் காரணமாக குடும்ப உறவுகள் சிதைந்துவிடும் என்ற கருத்து நிலவியது. ஆனால், இன்றும் சமுதாயத்தில் குடும்ப உறவுகள நன்றாகவே உள்ளன. குடும்ப உறவுகளில் துன்பங்களை அனுபவித்து அவற்றில் இருந்து விடுபட்டு தங்களது வாழ்வை மறுசீரமைப்பதற்கு இந்தச் சட்டத்தால் வழி ஏற்பட்டுள்ளது. குடும்ப வாழ்வில் பிரச்சினைகள் எதுவும் இல்லாதவர்களின் வாழ்க்கை பிரச்சினையின்றித் தொடர்ந்தது. ஆனால், எமது நாட்டுப் பிரச்சினையில் சண்டைகள் பேச்சளவில் இருந்தாலும் பரவாயில்லை. ஆனால், இங்கு நடைபெறும் சண்டையோ ஆயுதங்களுடனேயே மேற்கொள்ளப்படுகிறது. எனவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு தேடுவதைத் தவிர அதை மேலும் சிக்கலாக்குவது முக்கியமான விடயமல்ல.

*கேள்வி:* அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற நாடுகள் இந்தப் பிரச்சினையில தலையிட்டு பிரச்சினையைச சிக்கலாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுகின்றன என்ற ஒரு கருத்தும் நிலவுகிறதே?

*பதில்:* ஒருசிலர் அவ்வாறு கற்பனை செய்யக் கூடும். இருப்பினும் இங்கு இருதரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் கடும் அவநம்பிக்கையுடன் செயற்படும் நிலைமை நிலவுகிறது. எதிரி மீண்டும் யுத்தத்தை மேற்கொள்ளக்கூடும் என்ற சந்தேகம் இருதரப்பினரிடமும் நிலவுகிறது. அந்தச் சந்தேகம் உண்மையாகுமானால் அதாவது மீண்டும் யுத்தம் ஆரம்பித்தால் அதனால் ஏற்படும் அழிவுகள் குறித்தும் இரு தரப்பினருக்கும் நன்கு புரியும். எனவேதான் விடுதலைப் புலிகளைச் சுற்றிவளைத்து தனிமைப்படுத்தி-கீழ்ப்படுத்தலாம் என்ற எண்ணமானது பயன்தரக்கூடியது அல்ல. அதேநேரம் தங்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படக்கூடும் என்ற எண்ணத்தில் அவர்கள் தங்களை வலுப்படுத்தவும் கூடும். இருப்பினும் அவ்வாறான தகவல்கள் அவ்வளவு தூரம் வெளி வராமலும் இருக்கக் கூடும்.

எவ்வாறாயினும் யுத்தமானது மிகவும் பயங்கரமானது என்ற அனுபவத்தை இருதரப்பினரும் அனுபவித்துள்ளனர். அவர்கள் தங்கள் கடந்த கால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டே ஒருவர் மீது ஒருவா அவநம்பிக்கை கொள்வதை அவர்கள் மறந்துவிட வேண்டும். ☆


உ

சுவாமி சரணம் ஐயப்பா!

அகில இலங்கை ஐயப்ப தேவஸ்தானம் - கொழும்பு

## மஹா கும்பாபிஷேகம்

ஆனந்த ஐயப்ப சுவாமிக்கும் பரிவார மூர்த்திகளுக்கும்

மஹாகும்பாபிஷேகம்

நாள்: நாளை (15-07-2002) திங்கட்கிழமை
நேரம்: காலை 5.30 மணி முதல் 6.45 மணிவரை.
இடம்: 478/67, அளுத்மாவத்தை வீதி,
கொழும்பு - 15.

ஐயப்ப அடியார்கள் அனைவரும் அருள் பெறுமாறு
அழைக்கப்படுகின்றனர்

*சுவாமியே சரணம் ஐயப்பா!*

*விளம்பர அனுசரணை:*
யாழ்.சபரீசன் ஐயப்பன் ஆலயம்
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(சி22938)

## ஆள் தேவை!

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உணவகத்துக்கு
சகலதும் நன்கு சமைக்கத் தெரிந்த, றொட்டி போடத் தெரிந்த
ஆள் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
நேரில் தொடர்பு கொள்ளவும்.

**S.நந்தன்**

இல.148, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(முட்டை அப்பிள் கடைக்கு அருகில்)

(5985)

## வாழ்த்துக்கள்!

சுயமுயற்சி ஒன்றையே மூலதனமாகக்கொண்டு மத்திய கல்லூரி மாதாவுக்கு மகத்தான இந்த வெற்றியைப் பெற்றுக்கொடுத்திருக்கும் மத்தியின் கிரிக்கெட் வீரர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

ஒவ்வொரு விடயத்திலும் மத்திய கல்லூரி மாணவர்கள்
இவ்வாறு எழுச்சி கொண்டால் என்றும்

**வெற்றிமேல் வெற்றிதான்!**

"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"

கொழும்பு வாழ்
யாழ். மத்திய கல்லூரியின்
பழைய மாணவர்கள்.

(5993)



உ

சாமியே சரணம் ஐயப்பா!

### அனலையம்பதி - நயினாகுளம்

### அருள்மிகு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தானம்

## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

**ஐயப்பன் மெய்யடியார்களே !**

மேற்படி ஐயனார் தேவஸ்தான மஹோற்சவம் நாளை (15.07.2002) திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

| | | |
|---|---|---|
| 15.07.2002 | திங்கட்கிழமை | நண்பகல் கொடியேற்றம் |
| 21.07.2002 | ஞாயிற்றுக்கிழமை | மாலை வேட்டைத் திருவிழா |
| 22.07.2002 | திங்கட்கிழமை | மாலை சப்பரத் திருவிழா |
| 23.07.2002 | செவ்வாய்க்கிழமை | காலை தேர்த் திருவிழா |
| 24.07.2002 | புதன்கிழமை | காலை தீர்த்தத் திருவிழா |
| 25.07.2002 | வியாழக்கிழமை | மாலை திருக்கலியாணம் |

மஹோற்சவ நாள்களில்
காலையும் மாலையும் படகுச் சேவை உண்டு.
அடியார்களுக்குத் தங்குமிடவசதிகள் செய்து கொடுக்கப்படும.

**- மேற்படி ஆலய பரிபாலன சபையினர்.**

ஐயனார் தேவஸ்தானம்,
அனலைதீவு - 05.

(5990)

## கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி.

**கணிதப் பிரிவு ஆரம்பம்**
**A/L Day,2003,2004**

15.07.2002 பி.ப.4.00 (திங்கள)

**பௌதிகம்**
*சந்திரப் பிரகாஷ்*
**இணைந்த கணிதம்**
*அம்பி*
**இரசாயனவியல்**
*செவ்வடிவேல்*

(5986)

Note:- I. 40மாணவர்களுக்கு மட்டும் அனுமதி.
II. 21.07.2002வரை அனுமதி வழங்கப்படும்.

## நாகம்ஸ் சுன்னாகம்

11.00, 3.30 மணி காட்சிகள்
சூர்யா, லைலா, ராஜ்கிரண் நடித்த

**நந்தா**

(சீன்மா)

மாலை 6.30மணிக்கு மட்டும்
ஜேம்ஸ் பொண்ட் 007 நடித்த

**THE WORLD IS NOT ENOUGH**

(ஆங்கிலப்படம்)

(5987)

## ராஜா யாழ்ப்பாணம்.

அஜித், ஜோதிகா, வடிவேல்,
ராதாரவி நடித்த

**ராஜா**

தினசரி 10.30, 2.30, 5.30

(C-22753)

## நிறஞ்சனாஸ்

சங்கானை

ரஜனி, சிவாஜி, சௌந்தர்யா
நடித்த

**படையப்பா**

காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)

(C-22754)

## லஷ்சுமி இணுவில்.

அஜித், ப்ரியாகில், ரகுவரன்

**ரெட்**

(சீன்மா)

தினசரி: 10.30,2.30,6.30 (ப.நே.)

(5987)

### அராலி கரைப்பிட்டி கணபதீஸ்வரன் திருக்கோயில்

## வருடாந்தத் திருவிழா

(15.07.2002 திங்கள் முதல் 24.07.2002 புதன் வரை)

| | | |
|---|---|---|
| *கொடியேற்றம்* | : | 15.07.2002 திங்கட்கிழமை காலை 9.00 மணி. |
| *முத்துச்சப்பறம்* | : | 18.07.2002 வியாழக்கிழமை இரவு 8.00 மணி. |
| *சப்பறம்* | : | 22.07.2002 திங்கட்கிழமை இரவு 8.00 மணி. |
| *தேர்* | : | 23.07.2002 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி. |
| *தீர்த்தம்* | : | 24.07.2002 புதன்கிழமை காலை 9.00 மணி. |
| *விழாக்குரு* | : | சிவஸ்ரீ தே.தேவேந்திரக் குருக்கள் |
| *நாதாஞ்சலி* | : | நாதகலாமணி R.சிவகுமார் குழுவினர் |

**- தேவஸ்தானம்.**

(5870)



உ

## ஓம் ஸ்ரீ காவலன்
## விவாகப் பொருத்துநர் நிலையத் திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் சித்திரபானு வருஷம் ஆனித் திங்கள் 30ஆம் நாள் (15.07.2002)
திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு

வடமராட்சி மக்களின் அன்பான வேண்டுகோளுக்கிணங்க

**வேணி இல்லம்**

*(கந்த முருகேசனார் சிலைக்கு அண்மையில்)*

## ஓம் ஸ்ரீ காவலன் விவாகப் பொருத்துநர் நிலையம்

என்ற ஸ்தாபனத்தை கல்லூரி வீதி, புலோலி தெற்கில
இளைப்பாறிய அதிபர் உயர்திரு வேணுகோபால அவர்களால்
திறந்து ஆரம்பித்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
மேற்படி திறப்புவிழா வைபவத்துக்கு எமது நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

☛ எமது வாடிக்கையாளர்கள் தங்களது விவாக வயதை எட்டிய பிள்ளைகளின் ஜாதகக் குறிப்புக்களை எமது நிலையத்தில் பதிவுசெய்து இலகு முறையில் திருமணங்களை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்பதை அன்புடன் அறியத் தருகின்றேன்.

*"வேணி இல்லம்"*
*கல்லூரி வீதி,*
*புலோலி தெற்கு.*

(5992)

*நிர்வாகி* - திரு.வை.கணேசன்
*விவாகப்பொருத்துநர்* - திரு.ப.முருகையா

# மரண அறிவித்தல்கள்

## சோமாஸ்கந்தன் ஜெயரூபன்

மன்னாரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சோமாஸ்கந்தன் ஜெயரூபன் நேற்று (13-07-2002) சனிக்கிழமை மன்னாரில் காலமானார்.

அன்னார் காரைநகர் மருதடியைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமாஸ்கந்தன் மற்றும் ஜெகதீஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், ஜெயகாந்தன், ஜெயக்குமார், ஜெயபாரதி, கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மன்னாரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*மன்னார்.* (5989) குடும்பத்தினர்.

## வேலர் பிள்ளையார்

வேலணை கிழக்கு 3 ஆம் வட்டாரத்தை (நேதாஜி) பிறப்பிடமாகவும், குறோசெற் லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலர் பிள்ளையார் நேற்று (13-07-2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் சிவகடாட்சம் (பழனி), மங்கையற்கரசி, அன்னமலர், சண்முகநாதன் (முன்னாள் லிகிதர், கமநல நிலையம், வேலணை), காலஞ்சென்ற வர்ணம்மா, மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவகுலநாயகம், மாக்கி (ஆசிரியை ,CIS), காலஞ்சென்ற கனகரத்தினம், சரவணமுத்து, ஞானதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் அகுலப்பிரியன், மனோட்சவாணி (பிரதேச சபை, வேலணை), சியாமளா, சிவடேந்திரன் (யாழ்.பல்கலைக்கழகம்), சிவச்செந்தூரன், சிவகணேசன், சிவதர்மளா, சிவபதி, நாகேந்தினி, நசேந்தினி (யாழ்.போதனா வைத்திய சாலை), தசேந்திரன் (கமநலசேவை, நல்லூர்), துஸ்ஸந்தன், சுகிர்தராஜ், தேவநந்தினி, மேகலாநந்தினி ஆகியோரின் பாசமிகு பேரனும் திருகுருவின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14-07-2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று பின்னர், தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*68, குறோசெற் லேன்,*
*கச்சேரி நல்லூர் றோட்,*
*யாழ்ப்பாணம்.* (5991)
வே.பி.சண்முகநாதன்
(மகன் - கமநலசேவை, புத்தூர்)

## கந்தையா இராஜரட்ணம் (மாமா)

(மின்சார ஒப்பந்தகாரர்)

பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும், ஆனைப்பந்தி மற்றும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராஜரட்ணம் நேற்று (13-07-2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நவநீதம் தம்பதிகளின் அன்பு மகனும் ஜெயரட்ணம், யோகரட்ணம், காலஞ்சென்றவர்களான தம்பிரட்ணம், பிலோமினா மற்றும் நவரட்ணம், காலஞ்சென்ற மேரி ஸ்ரெலா யூஜின் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14-07-2002) ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் மேற்கு, முத்தட்டுமட ஒழுங்கையிலுள்ள க.க.அருள்வேலின் (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) இல்லத்திலிருந்து பிற்பகல் 3.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு, பாண்டியன்தாழ்வு சந்தன மாதா கோயிலில் பிற்பகல் 3.30 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*"ஸ்ரீபவனம்"*
*முத்தட்டுமட ஒழுங்கை,*
*கோண்டாவில் மேற்கு.* (5988)
க.க.அருள்வேல்.

## திருமதி சிற்றம்பலம் சின்னப்பிள்ளை

கரவெட்டி மத்தி, பெரிய தோட்டத்தைச் சேர்ந்த திருமதி சிற்றம்பலம் சின்னப்பிள்ளை நேற்று (13.07.2002) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் (இளைப்பாறிய லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும் சிதம்பரநாதன் (முகாமையாளர், றீகல் வைன்ஸ் ஸ்ரோர்ஸ், நெல்லியடி), இந்திராதேவி (முன்னாள் விரிவுரையாளர் - யாழ்.பல்கலைக்கழகம்), சந்திராதேவி (கனடா), பத்மநிதி ஆகியோரின் அன்புத் தாயாரும் அருந்தவரதி சதானந்தன் (மக்கள் வங்கி, கொழும்பு தலைமையகம்), தனசீலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கபிலன், உமாசங்கர், ஜானகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆழ்வாப்பிள்ளை (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்) அவர்களின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்பு அறிவிக்கப்படும்.

தகவல்:
*கரவெட்டி மத்தி,*
*பெரிய தோட்டம்,*
*கரவெட்டி.* (C-22939)
சி.சிதம்பரநாதன்
(மகன்)

## மயில்வாகனம் இராசரெத்தினம்

வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், 40,நாயன்மார் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் இராசரெத்தினம் அவர்கள் நேற்று (13.07.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மூத்த மகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நகமுத்து ஆகியோரின் மருமகனும் இரத்தினசபாபதி (கனடா), காலஞ்சென்றவர்களான இலட்சுமி, கனகரத்தினம், லீலாவதி மற்றும் ஞானேஸ்வரி (வவுனியா) ஆகியோரின் சகோதரரும் செல்லத்துரையின் (இந்தியா) மைத்துனரும் சகுந்தலா தேவி, லோகேஸ்வரி, சதானந்தன் (பிரான்ஸ்), சண்முகானந்தன் (கனடா), தயானந்தன் (பிரான்ஸ்), கிருபானந்தன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரமநாதன் (பொறியியலாளர், தேசிய வீடமைப்பு அதிகார சபை, யாழ்ப்பாணம்), அருணகிரிநாதன் (அதிபர், வேலணை சைவப் பிரகாச வித்தியாலயம்), சிவநாயகி (பிரான்ஸ்), சுகந்தா (கனடா), உதயா, அனுசியா ஆகியோரின் மாமனாரும் துஷசிகா, சயந்திகா, பிரசாந், தனுசாந், கிருசாந், நிருஷா, அருணராஜ, கார்த்திகா, மைதிலி, சுதன், வானதி, அக்சரன், கஸ்தூரி, கவிக்னன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை மேற்கு, அம்பலவி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பொ.அருணகிரிநாதன் (அதிபர்)*
*40,நாயன்மார் வீதி, நல்லூர்.* (5994)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### கல்வியியல் கல்லூரிகளில்

# பட்டம் பெற்ற 197 பேர் ஆசிரியர் நியமனம் பெறுவர்

## நாளை கடிதங்கள் கையளிப்பு

திருகோணமலை,ஜுலை14

கல்வியியல் கல்லூரிகளில் டிப்ளோமா பட்டம் பெற்று வெளியேறிய 197 பேர் நாளை திங்கட்கிழமை வடக்கு - கிழக்கு பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் பெறவுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளை காலை திருகோணமலையில் உள்ள மாகாணக் கல்வி அமைச்சில் வைத்து வழங்கப்படுமென அமைச்சின் செயலாளர் க.சண்முகலிங்கம் அறிவித்துள்ளார்.

மேற்படி ஆசிரியர்களில் 62 பேர் சிங்கள மொழிமூலப் பாடசாலைகளிலும், 135 பேர் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளிலும் ஆசிரிய நியமனம் பெறுவர் என்றும் -

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படும் என்றும் - அவர் தெரிவித்துள்ளார்.(எ)

## குடும்பத்தகராறு கத்திவெட்டில் முடிந்தது

யாழ்ப்பாணம்,ஜுலை14

கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட தகராறு கத்திவெட்டில் முடிந்தது. மனைவி கணவனின் கத்தி வெட்டுக்கிலக்காகித் தலையில் படுகாயமடைந்தார்.

உரும்பிராயில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் விஜயரவி தயாநிதி (வயது28) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயம் அடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-15)

## தாதிய மாணவர் ஒன்றுகூடல்

கோப்பாய்,ஜுலை14

நாட்டில் உள்ள அனைத்துத் தாதிய பயிற்சிப் பாடசாலையைச் சேர்ந்த தாதிய மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஒன்றுகூடலில் பங்குபற்றுவதற்காக யாழ்.தாதியர் பயிற்சி பாடசாலையைச் சேர்ந்த சுமார் 40 மாணவர்கள் மற்றும் போதனாசிரியர்கள், தாதிய பரிபாலகர் அடங்கலான குழுவினர் நாளை திங்கட்கிழமை கொழும்பு செல்லவுள்ளனர். (எ-72)


பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
A/L DAY CLASS
திங்கள், புதன், வியாழன் நடைபெறுகின்றன.
Com.- முரளி 8-9 மணி.
Eco.- வரதராஜன் 9-10மணி.
Acc.- முகுந்தன் 10-11மணி.
கலைப்பிரிவுகள்
பிரிவு I திங்கள்.புதன். வியாழன்
பிரிவு II சனி. ஞாயிறு (5977)



இணுவில்
பொருளியற் கல்லூரி
கே.கே.எஸ்.றோட்.இணுவில்.
A/L DAY CLASS
திங்கள், புதன், வியாழன்.
Acc.- முகுந்தன் 8 - 9
Com.- முரளி 9 - 10
Eco.- வரதராஜன் 10 - 11
★ கலைப்பிரிவுகளும் நடைபெறுகின்றன. (5976)


### தென்மராட்சியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பப்படுவதற்காக பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள் ளது.

இப்பேரணியில் கலந்து கொள்வதற்கு வசதியாக, தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் அனைத்தையும் காலை 9.30 மணிமுதல் சில மணி நேரம் மூடி ஒத்துழைக்குமாறு தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கச் செயலர் கேட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்கள் தவிர்ந்த தென்மராட்சிப் பிரதேசத்தின் சகல தரப்பு மக்களையும் இப்பேரணியில் கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை -

இப்பேரணிக்கு ஆதரவு தெரிவித்தும், சகல பொதுமக்களையும் பேரணியில் கலந்துகொள்ளுமாறு வேண்டியும் -

தனங்களப்பு, மறவன்புலோ, கைதடி, நாவற்குழி, கோயிலாக்கண்டி இடம்பெயர்ந்தோர் சங்கம் மற்றும் தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியன அறிக்கை விட்டுள்ளன.

(ம-9)

### வைகோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைகோவை விடுத்லை செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கோரவிருக்கின்றனர்.

அடுத்த நடவடிக்கையாக எதிர்வரும் வியாழக்கிழமை காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை வவுனியா நகரசபை மைதானத்தில் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படவிருக்கின்றது. இந்த உண்ணாவிரதத்தில் கூட்டமைப்புத் தலைவர்களும் பொதுமக்களும் பங்குபற்றுவர்.

வைகோ விடுவிக்கப்படும்வரை பல்வேறு வகையான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்போவதாக கூட்டமைப்பின் பிரமுகரான என்.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

(ம-3)

# இளைஞன் தாக்கப்பட்ட விவகாரம் கைதான மூவருக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஜுலை14

யாழ்.ஸ்ரான்லி வீதியில் நேற்று முன்தினம் கதிரையுடன் கயிற்றால் கட்டி இளைஞன் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட நாகராசா நவரத்தினராசா, இராசலிங்கம் இந்திரதேவன், நடராசா சுதேஷன் ஆகியோர் யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும் படி நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை -

தனது மகன் தாக்கப்பட்டதற்குக் காரணம் கடன் விவகாரம் இல்லை என்றும் -

அது திட்டமிட்ட கொலை முயற்சி என்றும் -

தாக்கப்பட்ட இளைஞரின் தகப்பனார் தெரிவித்துள்ளார்.

(ம-3)

### செங்கலடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிகள் நேற்றுச் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

நாளை பாதை திறக்கப்பட்ட பின்னர் முதலில் சமாதான பஸ் ஒன்று பதுளைவரை சென்று திரும்பவிருக்கின்றது.

இந்தச் சமாதான பஸ்ஸில் இராணுவ அதிகாரி அன்ரனீஸ், விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்பு அரசியல் துறைப்பொறுப்பாளர் கரிகாலன் மற்றும் செய்தியாளர்கள் பயணம் செய்யவிருக்கின்றனர். (ம-3-21)

### பிரபாவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கையில் மாற்றமில்லை.

அந்தக் கோரிக்கை சமாதான முயற்சியை எந்த வகையிலும் பாதிக்கப்போவதில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் தொடர்ந்து பதிலளிக்கையில் கூறியதாவது:-

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா தனது ஆதரவை வழங்கும். அரசும் - புலிகளும் விரைவாகப் பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும். பேச்சுகள் ஆரம்பித்து இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் --என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-3)


இளமை மற்றும் அழகின் ரகசியம்
விஞ்ஞான சான்று பெற்றது.
பக்க விளைவுகள் இல்லை.
பயோட்டின் - H
உங்கள் கூந்தல், சருமம் மற்றும் நகங்களின் ஊட்டத்திற்கு....
தினம் இரண்டே கேப்ஸியூல்கள்
மேலும் தலைமுடி உதிர்தல், இளநரை, மெல்லிய உடையக் கூடிய முடி போன்றவற்றிலிருந்து முற்றாக நிவாரணம் பெற BIOTIN - H உதவுவதாக விஞ்ஞான ரீதியாகக் கண்டறியப்பட்டுள்ளது.
தரமிக்க Biotin - H. மக்களின் நம்பிக்கையை வென்ற துரித நிவாரணி



உங்கள் உணவுக்குச் சுவையூட்டவும்
எங்கள் விவசாயிகளுக்குப் புது வழிகாட்டவும்

தர உத்தரவாதத்துடன் நுகர்வோருக்கு
அறிமுகப்படுத்துகிறோம்

JACHUFI

மெது தயாரிப்புகள்



Quality Jaffna Product

தயாரிப்புகள்



முற்றிலும் நவீன இயந்திரங்களினால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்படுகிறது.

ACTION CONTRE LA FAIM



சர்வதேச சமூகத்தின் உறுதுணையுடன்

Liberté • Égalité • Fraternité
RÉPUBLIQUE FRANÇAISE

✸ மாம்பழ ஜாம்
✸ பழக்கலவை ஜாம்
✸ விளாம்பழ ஜாம்
✸ ஸ்ரோபரி ஜாம்
✸ மாம்பழ சட்னி
✸ ஊறுகாய்
✸ மோர் மிளகாய்
✸ மாம்பழ கோடியல்
✸ பழக்கலவை கோடியல்
✸ தேசிக் கோடியல்
✸ நெல்லிரசம்
✸ தக்காளி சோஸ்
✸ மிளகாய் சோஸ்
✸ மேலும் பல.....

RRAN

மக்களினால் மக்களுக்கான கூட்டுறவுப் பாலம்
ஜசுபி தொழிலகம், ஆலடி, மானிப்பாய் வீதி, உடுவில்.
தலைமையகம்:- சுன்னாகம், ப.நோ.கூ.சங்கம், கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
(C-22902)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361½ஆம் இலக்கத்திலுள்ள அலுவலகத்து பணிமனையில் 14.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.